REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 14 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வருட. 90 இல. 164 | Thursday 14, July, 2022 | 12 பக்கங்கள் | 40/-

MOBILE
TALK TEXT DATA BOOSTER 505
ஒரே பக்கேஜில் TALK TEXT DATA
Voice 1777 நிமிடங்கள்
Text 1777 sms
Data 2GB anytime data
SLT MOBITEL
TRC/M/PRO/22/03

# நாடு முழுவதும் அவசரகால சட்டம் மேல் மாகாணத்தில் ஊரடங்கு சட்டம்

## குழப்பம் விளைவிப்போரை உடன் கைது செய்யவும் உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று முற்பகல் முதல் மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டமும் நாடு முழுவதும் அவசர காலச் சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமரும் பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் வன்முறைகளில் ஈடுபடும் நபர்களை உடனடியாக கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கும் முப்படையினருக்கும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

அதேவேளை வன்முறை மற்றும் குழப்பங்களை ஏற்படுத்துவோர் பயணிக்கும் வாகனங்களை கைப்பற்றுமாறும் அவர்களை பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகை:

# அரச தொலைக்காட்சி, வானொலி சேவைகள் ஒரு மணிநேரம் பாதிப்பு

## பாதுகாப்பை பலப்படுத்தி அரசு நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

ஆர்ப்பாட்டக்காரர்களின் செயற்பாடுகளால் நேற்று சுமார் ஒரு மணிநேரம் அரச தொலைக்காட்சி மற்றும் அரச வானொலி சேவைகள்

04

# ஜனாதிபதி மற்றும் பசில் வெளியேற நாம் உதவவில்லை

## பரவும் செய்திகளுக்கு இந்தியா மறுப்பு

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு இந்தியா வசதிகளை செய்து கொடுத்ததாக வெளியான ஊடகத் தகவல்களை இந்தியா மறுத்துள்ளது. இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் இந்த மறுப்புச்செய்தியை வெளியிட்டுள்ளது. இந்த தகவல்

04



கொழும்பு, கொள்ளுப்பிட்டி,பிளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று மதியம் பிரதமரின் அலுவலகத்துக்குள் நுழைந்தனர். போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் பலமுறை கண்ணீர் புகை பிரயோகித்த போதிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பிரதமர் அலுவலகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். படம் துஷாரா பெர்ணாண்டோ

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமனம்


## சபாநாயகர் நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அரசியலமைப்பின் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கிணங்க மேற்படி நியமனம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள சபாநாயகர், அது தொடர்பில் ஜனாதிபதி தமக்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள



சபாநாயகர் அரசியலமைப்பின் 37 (1) சரத்திற்கு அமைய நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதாகவும் சபாநாயகர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்வதாக தமக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ள சபாநாயகர்

04

ஆவணங்களை இல்லாதொழிக்க ஒருபோதும் இடமில்லை:

# அச்சுறுத்தலை தடுக்க முப்படை தளபதிகளுக்கும் முழு அதிகாரம்

## பதில் ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாசிசவாத அச்சுறுத்தலை இல்லாதொழிக்க வேண்டுமென்றும் அதற்காக பொலிஸ் மாஅதிபர் மற்றும் முப்படை தளபதிகளுக்கும் முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அச்சுறுத்தலை ஏற்படுத்தி ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகையும் முற்றுகையிட்டு அங்குள்ள முக்கியமான ஆவணங்களை இல்லாதொழிப்பதற்கு ஒருபோதும்

04

அமைச்சரவை கூடவில்லையெனில்

# அரச ஊழியர்களுக்கான ஜூலை மாத சம்பளம் இல்லை

## கடும் சிக்கல் நிலையில் அரசாங்கம்

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு அரச ஊழியர்களுக்கு இம்மாதம் உரிய திகதியில் சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பளம் வழங்குவதற்கு பணம்

04

# அரசியல் பதவிகள் எதுவும் எனக்கு அவசியமில்லை

## தொழில்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் திருப்தி சாலிய பீரிஸ்

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியை வகித்து தொழில்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் திருப்தியடைவதால், எந்தவொரு அரசியல் பதவியையும் வகிக்க விரும்பவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். பேஸ்புக் ஊடாக பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும், சட்டத்தரணியாக



04



பிரதமர் அலுவலகம் போராட்டகாரர் வசம் 03
நேற்று கட்டுப்பாட்டுக்குள் வந்தது



நாடு இரத்த ஆறாக மாறுவதை தடுக்கவும் 03
மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள்!

ஜனாதிபதி மற்றும் அலரி மாளிகையிலிருந்து

# ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற கோருகிறது சட்டத்தரணிகள் சங்கம்


## அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவசர கோரிக்கை

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாக வெளியாகும் செய்திகள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்துவதாகவும், இந்த கட்டிடங்களின் பொறுப்பு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அங்குள்ள

04

பிரதமர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்:

# நிலைமையை கட்டுப்படுத்த படையினர் கண்ணீர்ப்புகை, நீர்த் தாரை பிரயோகம்



## 39 பேர் காயமடைந்து வைத்தியசாலையில்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகம் முன்பாக நேற்று நிலவிய குழப்பகரமான சூழ்நிலையையடுத்து 39 பேர் காயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று மதியம் பிரதமர் அலுவலகத்துக்குள் பிரவேசித்ததையடுத்து

04

# பதவியிலிருந்து விலகுமாறு அறிவிக்கக்கோரி கட்சித்தலைவர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு, அந்தப் பதவியிலிருந்து விலகுமாறு அறிவிக்கக்கோரி கட்சித் தலைவர்கள் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று தீர்மானித்தார். அதனடிப்படையில் நேற்று மாலை நடைபெற்ற இந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரையும் அந்தப் பதவிகளிலிருந்து விலகுமாறு மக்கள் வலியுறுத்தி வருவதால் அவ்வாறு இராஜினாமா செய்த பின் உரிய

04

## சர்வதேச செய்திகள்

# சூடுபிடிக்கிறது பிரிட்டனின் புதிய பிரதமருக்கான போட்டி

### வேட்பாளர்கள் 8 ஆக குறைந்தது



பிரிட்டனில் புதிய பிரதமரைத் தேடும் வேட்டை சூடுபிடித்துள்ளது. எட்டுப் பேர் முதல் சுற்றைக் கடந்து வந்துள்ளனர்.

முக்கிய வேட்பாளராகக் கருதப்பட்ட கிரான்ட் ஷாப்ஸ் ஒதுங்கிக்கொண்டார். முன்னாள் சுகாதார அமைச்சர் சாஜித் ஜாவித், ரெஹ்மான் கிஸ்தி ஆகியோரும் போட்டியில் இருந்து விலகிக் கொண்டனர்.

போட்டியில் உள்ள அனைவரும் கன்சர்வேடிவ் கட்சியின் 20 உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுள்ளனர். இதனை தொடர்ந்து அவர்கள் முதல் சுற்று வாக்கெடுப்பில் போட்டியிடுவார்கள்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களின் முன்பதிவு நிறைவடைந்து விட்டது. முதல் சுற்று தேர்தலில் 30 எம்.பிக்களின் ஆதரவை பெறத் தவறும் எந்தவொரு வேட்பாளரும் வெளியேற்றப்படுவார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனாக் அதிகச் செல்வாக்கோடு உள்ளார். பிரதமர் போரிஸ் ஜோன்சன், பதவி விலகுவதில் முக்கியப் பங்கு வகித்தவர் அவர். ரிஷி சுனாக் சர்ச்சைக்குரிய தலைவர். வரியை உயர்த்தியவர் என்று குறைகூறப்பட்டவராவார்.

ஆனால் பதவிக்கு வந்தால் புதிய கொள்கைகளை அறிவிக்கும் முன்னர், மக்களோடு பேசப் போவதாக இப்போது அவர் கூறுகிறார்.

# இந்திய வெளிவிவகார செயலாளர் ஈரானிய பிரதி அமைச்சருடன் பேச்சு

### பிராந்திய விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடல்



ஈரானிய வெளிவிவகார அமைச்சின் துணை அமைச்சர் அலி பஹாரிகானியுடன் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினாய் க்வாட்ரா தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக உரையாடினர். ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹூசேன் அமிர் அப்துல்லாஹியான் இந்திய விஜயம் நடைபெற்ற ஒருமாத காலத்தில் இப்பேச்சுவார்த்தை நிகழ்ந்துள்ளது.

ஈரானின் சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் அமைந்துள்ள பவாஹார் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இந்தத் துறைமுக அபிவிருத்தியின் பின்னர் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய மூன்று நாடுகளும் இதனால் பயன்அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வளைகுடா பிராந்தியத்தில் இந்தியா ஈரானை நெருங்கிய நட்பு நாடாகக் கருதுகிறது. எனவே தென் கிழக்கு ஆசியாவுக்கும் மத்திய ஆசியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதில் இந்தியாவும் ஈரானும் இணைந்து செயலாற்றி வருகின்றன.

இவ்வகையில் இவ்விருவருக்கும் இடையில் இடம்பெற்றுள்ள இப்பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சபாஹார் துறைமுக அபிவிருத்தி, ஆப்கானிஸ்தான் நிலைமைகள் மற்றும் இப்பிராந்தியத்தில் காணப்படும் சவால்கள் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய இந்தியா, ஆப்கான் நிலைமைகளை ஈரான் ஊடாகவே கையாண்டு வருகிறது.

# இந்தியாவில் தொழில் தொடங்கும் பிரெஞ்சு விமான தயாரிப்பு நிறுவனம்

### உயர் பிரெஞ்சு அதிகாரியுடன் ராஜ்நாத்சிங் பேச்சு



பிரெஞ்சு விமான இயந்திரம் தயாரிப்பு நிறுவனம் ஒன்று இந்தியாவில் விமான இயந்திர பராமரிப்பு பழுதுபார்ப்பு தொழிற்சாலைகளை நிறுவும் வகையில் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

பிரான்சின் புகழ்பெற்ற விமான இயந்திர தயாரிப்பாளரான சப்ரான் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஒலிவியர் அன்றீஸ் புதுடில்லியில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது ஹைதராபாத் மற்றும் பெங்களூருவில் இரண்டு தொழிற்சாலைகளை நிறுவுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. ஹைதராபாத் தொழிற்சாலையில் நவீன விமான பயிற்சி பெற்றவர்களுக்கு இங்கே வேலை வாய்ப்புகள் கிட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்தியாவில் தயாரிப்பு, வெளிநாடுகளுக்குமான தயாரிப்பு' என்ற இந்திய அரசின் கொள்கைக்கு அமைவாக இந்தியாவுடன் மேலும் கூட்டுத் தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபடுமாறு இப்பேச்சுவார்த்தையின் போது பிரெஞ்சு நிறுவனத்துக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

# கொவிட் பெருந்தொற்றுக்கு மத்தியிலும் சீன கஸினோ விடுதிகள் திறந்து வைப்பு



சீனாவின் இரவு விடுதிகள் மற்றும் சூதாட்ட நிலையங்களுக்கு பெயர்போன சீன விசேட நிர்வாக மாவட்டமாகவும் இயங்கும் மக்காவ் பிராந்தியத்தில் கொவிட் தொற்று பரவி வருவதால் அங்கு வாழும் ஆறு லட்சம் குடிமக்கள் மீது பரிசோதனைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

ஜூலை முதல் வாரத்தில் 68 புதிய தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட அதே சமயம் ஜூன் நடுப்பகுதியில் 852 தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இதே சமயம் 12 ஆயிரம் பேருக்கு அதிகமானோர் சுகாதார தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு மத்தியிலும் இங்குள்ள கசினோக்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இப்பிராந்திய நிர்வாகத்தின் 80 சதவீதமான வருமானம் இவ்விடுதிகளில் இருந்தே கிடைக்கிறது. இந்நகர மக்களில் பெரும்பாலானோர் இத்தகைய விடுதிகளிலேயே தொழில் செய்து வருகின்றனர்.

இதேசமயம் சீனாவின் ஷங்காய் போன்ற பெரு வணிக நகரங்களில் முழுமையான பூட்டு நிலையே காணப்படுகிறது. அவசியமற்ற அரசு நிறுவனங்கள், பாடசாலைகள், பூங்காக்கள், விளையாட்டுத் துறை பொழுதுபோக்கு அம்சங்கள் என்பன முழுமையான பூட்டுக்கு இலக்காகியுள்ளன.

# தாய்வான் வானில் சீன செயற்பாடு அதிகரிப்பு



தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள வலயம் மற்றும் பஷி கால்வாயில் தெற்காக சீன போர் விமானங்கள் பறப்பது அதிகரிக்கப்பட்டிருப்பது தீவை சுற்றிய பகுதியில் அதன் விரிவாக்கங்களின் ஓர் அங்கமாக இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 555 படை செயற்பாடுகளை சீன இராணுவம் மேற்கொண்டிருப்பதோடு இதில் 398 போர் விமான செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 187 தடவைகளாகவே அது இருந்துள்ளது என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்வானை தனது ஆட்புலத்தின் ஓர் பகுதியாகக் குறிப்பிடும் சீனா, அதனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான சாத்தியத்தையும் நிராகரிக்கவில்லை.

# வலப்பனை IOC எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சீல் வைப்பு

வலப்பனை ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் பெற்றோல், டீசல் ஆகியவற்றில் ஊழல் இடம்பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் வலப்பனை ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு (12) இரவு முதல் சீல் வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வாகன சாரதிகளினால் ஊழல் தொடர்பாக வலப்பனை பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டை ஏற்று வலப்பனை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சி தலைமையி லான குழுவினர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று ஊழல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் போது நிரப்பு நிலையத்தில் ஆயிரம் ரூபாவுக்கு எரிபொருள் நிரப்ப பணம் வழங்கப்பட்டால் அதன் அளவு 800/= ரூபாவுக்கு குறைவாகவே காணப்பட்டதை கண்டுப்பிடித்துள்ளனர்.

இதன் மூலம் எரிபொருள் நிரப்புவதில் தொடர்ச்சியாக இவ்வாறு ஊழல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இதையடுத்து இந்த நிரப்பு நிலையத்திற்கு சீல் வைத்துள்ள பொலிசார், இது தொடர்பாக ஐஓசி நிறுவனத்திற்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன் ஐஓசி நிறுவன அதிகாரிகள் இன்று நிரப்பு நிலையத்திற்கு வருகை தந்து எரிபொருள் நிரப்பும் குழாய் மற்றும் இயந்திரங்களை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

**ஆ.ரமேஸ்**

# கேகாலையில் 5,945 லீற்றர் டீசலுடன் ஐவர் கைது

கேகாலையில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட 5945 லீற்றர் டீசலுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு, லொறியொன்றில் 3000 லீற்றர் டீசலைக் கொண்டு சென்ற போது, 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பாணந்துறை, கனேமுல்ல மற்றும் மொரட்டுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பகுதியிலேயே நேற்று (13) அதிகாலை 2945 லீற்றர் டீசலுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் பொல்கஹாவல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேக நபர்கள் ஐவரையும் கேகாலை பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

## மலைச்சாரல்

# ஊடக அடக்கு முறைக்கு ஹற்றன் மல்லியைப்பூ சந்தியில் போராட்டம்

**ஹற்றன் விசேட நிருபர்**



ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதற்கும் ஊடக அடக்கு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹற்றன் மல்லியைப்பூ சந்தியில் சத்தியாகிராக போராட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

'ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைக்கு எதிரான மக்கள் குரல்' எனும் தலைப்பில் குறித்த சத்தியாகிரக போராட்டத்தினை பரந்தப்பட்ட வெகுசன இயக்கம் நுவரெலியா மாவட்ட அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

சத்தியாகிரக போராட்டக்காரர்கள் 'ஊடக சுதந்திரத்தை பாதுகாப்போம்,' அராஜகத்திற்கு அடிபணியோம்' 'ஒழிக உன் ஊழல் ஆட்சி எழுக எம் மக்கள் ஆட்சி' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

குறித்த போராட்டத்திற்கு சமயத் தலைவர்கள்,சிவில் அமைப்புக்கள் மக்கள் பிரதிநிதிகள்,சமூக சேவகர்கள்,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போலி இரத்தினக் கற்களை விற்றவர் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



போலியாக தயாரிக்கப்பட்ட இரத்தினக்கற்களை விற்று வந்த நபர் ஒருவரை எம்பிலிப்பிடிய பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர். எம்பிலிப்பிட்டிய மொரகெட்டிய பிரதேசத்தை சேர்ந்த இந் நபர் நீண்ட காலமாக இம்மோசடி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

சமூக வலைத்தளம் மற்றும் இணையத்தளங்கள் மூலம் இவர் தனது வியாபாரத்தை நடத்தி வந்துள்ளார்

எம்பிலிப்பிட்டிய பொலிசாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டவுடன் இவரால் ஏமாற்றப்பட்ட பலர் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


சந்தேக நபர் தனது கைவசம் வைத்திருந்த போலி இரத்தினக் கல் பரிசோதிக்கும் உபகரணங்கள் கைத்தொலை பேசிகள் ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். எம்பிலிப்பிட்டிய பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பதுளை பசறை பள்ளிவாசல் வீதி சந்திக்கருகில், ரயில்வே விடுதி வாளாகத்திலிருந்த பழைமையான மாமரமொன்று நேற்று (13) அதிகாலை பலத்த காற்றில் வீதியில் சரிந்து வீழ்ந்துள்ளது. (படம்: பதுளை தினகரன் நிருபர்)

# ஹங்குராங்கெத்த ருக்வூட் தோட்ட குடியிருப்பில் தீ பரவல்

**தெல்தோட்டை தினகரன் நிருபர்**



நுவரெலியா மாவட்டம் ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேவாஹெட்ட ருக்வூட் தோட்டத்தில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

ருக்வூட் தோட்டம் இலக்கம் இரண்டு பிரிவில் நேற்று காலை 8.00 மணியளவில் தோட்ட தொடர் குடியிருப்பு தொகுதியிலுள்ள வீடொன்றில் திடீர் தீ பரவியுள்ளது. இத் பரவலில் வீடிலுள்ள அனைத்தை பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் தீ பரவலுக்கு மின்சார ஒழுக்கே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

# ஜூலை 09 ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்கு இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் கண்டனம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

ஜூலை 09 போராட்டத்தில் செய்தி சேகரிக்க சென்ற சக்தி, சிரச ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து பல இடங்களில் பொலிசார் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலை இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

சம்பவம் தினத்தன்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வீட்டுக்கு முன்னால் நடந்த போராட்டத்தில் ஊடக கடமையில் ஈடுபட்டிருந்த போது அவர்கள் தாக்கப்பட்டதோடு கமராக்களும் சேதமாக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு தராதரம் பாராது உடனடியாக நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நாட்டின் ஊடகச் சுதந்திரமும் ஊடகச் சட்டமும் முறையாக இயங்க வேண்டும்மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2022 ஜுலை 14 வியாழக்கிழமை



தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆனி 30
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

### இராசி பலன்கள்

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

இலங்கை கலவர நிலை:

# சுப்பிரமணியன் சுவாமி இந்தியாவுக்கு எச்சரிக்கை

இலங்கையில் கட்டுக்கடங்காதவர்களின் நடவடிக்கைகள் குறித்து இந்தியா எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென இந்திய ஆளும் கட்சி அரசியல்வாதியான சுப்பிரமணியன் சுவாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பதிவில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள அவர், கொழும்பில் சுற்றித் திரியும் கட்டுக்கடங்காத கூட்டத்தினர், நக்சல்கள், சமூகவிரோதிகளால் வழி நடத்தப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே இந்த பிரிவுகளால் இலங்கையின் சீரழிவு மற்றும் தமது நாட்டின் எதிர்கால தாக்கம் குறித்து இந்தியா கவனம் செலுத்த வேண்டுமெனவும் சுப்பிரமணியன் சுவாமி கோரியுள்ளார்

ஜனாதிபதி மாளிகையிலிருந்த

# தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு சேதம்

தொல்பொருள் திணைக்களம் தெரிவிப்பு

ජුරාවිද්‍යා දෙපාර්තමේන්තුව
தொல்பொருளியல் திணைக்களம்
Department of Archaeology

ஜூலை 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த இடங்களில் உள்ள புராதன 04

பயணிகள் இலகுவாக தொடர்புகொள்ள

# ரயில்வே திணைக்கள அவசர எண் அறிமுகம்




இலங்கை ரயில்வே திணைக்களம், பயணிகளுடன் இலகுவாக தொடர்பு கொள்வதற்காக அவசர இலக்கமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. ரயில் சேவைகள், அட்டவணைகள் அல்லது பிற தொடர்புடைய தகவல்கள் பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு திணைக்களத்தை தொடர்பு கொள்ள விரும்பும் பயணிகள் எந்த நேரத்திலும் 1971 ஐ அழுத்துவதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இதன் மூலம் பொது மக்கள் மூன்று மொழிகளிலும் (சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம்) திணைக்களத்தை தொடர்பு கொள்ளலாம். புகையிரத இயக்க அட்டவணைகள், இருக்கை முன்பதிவுகள், கட்டணம், புகையிரத பாதுகாப்பு சேவைகளை தொடர்பு கொள்ளுதல் மற்றும் ரயில்சேவை தொடர்பான பிரச்சனைகள் போன்ற தகவல்களை மக்கள் பெறலாம். புதிய 24 மணி நேர அவசர எண் இன்று (14) காலை 7.00 மணிக்குப் பின்னர் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு காலிமுகத்திடல் போராட்டகளத்தில் மோதல்

காயங்களுடன் நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இரு குழுக்களுக்கிடையில் நேற்றுக்காலை இடம் பெற்ற மோதலில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த நான்கு பேர் வெட்டுக் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் அனைவரும் 72 ஆம் இலக்க வார்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 15,17 மற்றும் 20 வயதைக் கொண்ட மூன்று இளைஞர்களும் வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞர் ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்குங்கள்

ஜெனரல் சவேந்திர சில்வா நாட்டு மக்களிடம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த அவர்,

பாதுகாப்பு படையினரும் பொலீசாரும் நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்கமையவே செயல்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமாச் செய்ததாக சபாநாயகர் எமக்கு அறிவித்துள்ளார். ஜனாதிபதி ஒருவரை நியமிக்கும் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவர் எம்முடன் கலந்துரையாடினார்.



இக்காலப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து தெளிவுபடுத்துமாறு நாம் அவரை கேட்டுக்கொண்டோம். அதன்படி அவரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காமல் முப்படை மற்றும் பொலிசாருக்கு நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து செயற்படுவது அவசியம்

எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரண்டு நபர்களை பாதுகாப்பதற்குப் பதிலாக நாட்டின் இரண்டு கோடி மக்களை பாதுகாப்பதற்கு பாதுகாப்புப் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அனைவரும் 04

# நாடு இரத்த ஆறாக மாறுவதை தடுக்கவும்

மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள்!



நாடு அராஜக நிலைக்கு தள்ளப்பட்டு இரத்த ஆறாக மாறுவதை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் மக்களின் கோரிக்கைக்கு பணிந்து தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கை வரலாற்றில் ஒருபோதும் நடக்காதவை இன்று இடம் பெற்று வருவதாகவும், இந்த நாட்டை முற்றாக அழிக்கும் நோக்கில் அதிகாரத்தின் முன் கிறுக்குத்தனமான சிறு குழுவினர் செயற்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# பிரதமர் அலுவலகம் போராட்டக்காரர் வசம்

நேற்று கட்டுப்பாட்டுக்குள் வந்தது

கொள்ளுப்பிட்டி, ப்ளவர் வீதியில் உள்ள பிரதமர் அலுவலகத்திற்கு முன்னால் நேற்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் பொலிஸ், இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி பிரதமரின் அலுவலகத்திற்குள் நுழைந்தனர்.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் பலமுறை கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பிரதமர் அலுவலகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

முன்னதாக, ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவையும் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி

உன்னிச்சையில் சம்பவம்

**மண்டூர் தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு,ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில் செவ்வாய்கிழமை (12) இரவு காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

ஆயித்தியமலை வடக்கில் வசித்த, போரதீவைச் சேர்ந்த(54 வயது) முண்டாப்போடி விஜயராசா என்பவரே யானை தாக்குதலில் பலியானவராவார்.

ஆயித்தியமலையிலுள்ள தனது வீட்டிலிருந்து உன்னிச்சை மாரியம்மன் 04

# பாராளுமன்றத்தின் பாதுகாப்பை பலப்படுத்த விசேட நடவடிக்கை

பாராளுமன்றத்தின் பாதுகாப்பை பலப்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதற்காக இராணுவ கமாண்டோக்கள் குழுவொன்று அங்கு வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்துக்கருகில் இடம்பெற்ற அமைதியின்மையை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்க தூதரக சேவைகள் இரண்டு தினங்களுக்கு இரத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தமது சேவைகளை இரண்டு நாட்களுக்கு இரத்துச் செய்துள்ளது. மிகுந்த எச்சரிக்கையுடன், தூதரகம் புதன்கிழமை பிற்பகல் சேவைகளையும் (அமெரிக்க குடிமக்கள் சேவைகள் மற்றும் என்ஐவி பாஸ்பேக்) மற்றும் வியாழக்கிழமையின் அனைத்து தூதரக சேவைகளையும் இரத்து செய்வதாக தூதரகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் தாம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும், மேலும் இரத்து செய்யப்பட்ட அனைத்து சந்திப்புகளையும் மீண்டும் திட்டமிடவுள்ளதாகவும் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

UNITED STATES EMBASSY COLOMBO

12.07.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4813 — ரூ. 2,525,720.00
அச்சிடப்பட்ட திகதி : 11.07.2022
K 9 0 7 5 4 4 — ரூ. 18,697,788.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 122 — ரூ. 2,682,740.00 — 11.07.2022
மகரம் 19 27 42 57 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,020,694.40

Mega POWER 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1161 — ரூ. 1,443,780.00 — ரூ. 260,499,870.00
N 07 13 32 56 70 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00
National Lotteries Board

12.07.2022 செவ்வாய்க்கிழமை www.nlb.lk NLB
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4814 — ரூ. 2,521,550.00
V 8 6 7 4 7 9 — ரூ. 19,299,170.60

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3056 — ரூ. 3,233,200.00
W 31 44 67 75 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,581,668.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 844 — ரூ. 1,631,040.00
D 10 29 43 52 — வெற்றி இலக்கங்கள் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,848,610.80

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1292 — ரூ. 2,220,720.00
வெற்றி இலக்கங்கள் 7 9 9 5 1 6 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,222,403.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 123 — ரூ. 3,291,720.00
மிதுனம் 10 23 43 54 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,054,776.80

Mega POWER 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1162 — ரூ. 1,239,900.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,597,682.00
N 01 12 24 34 46 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00
National Lotteries Board





ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவம் கடந்த 28.06.2022 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதனை தொடர்ந்து உற்சவம் சிறப்பாக இடம்பெறுவரும் நிலையில் ஆலயத்தின் சிறப்பு உற்சவங்களாக 10.07.2022ம் திகதி வேட்டைத் திருவிழாவும்,11.07.2022 ம் திகதி சப்பற திருவிழாவும் நேற்று முன்தினம் தேர்த் திருவிழாவும் சிறப்பாக இடம்பெற்ற நிலையில் நேற்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றது.

படங்கள் மாங்குளம் குறூப் நிருபர்

# ஒரு மாதத்திற்கு பின் வவுனியாவில் லிற்றோ சமையல் எரிவாயு விநியோகம்



**வவுனியா விசேட நிருபர்**

ஒரு மாதத்திற்கு பின்னர் வவுனியாவில் 1000 பேருக்கு சீரான முறையில் லிற்றோ சமையல் எரிவாயு நேற்று வழங்கப்பட்டது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் உள்ள மைதானத்தில் வைத்து குறித்த சமையல் எரிவாயு வழங்கப்பட்டது.

லிற்றோ நிறுவனத்தினர் மற்றும் பொலிசார் இணைந்து அங்கு வருகை தந்திருந்த மக்கள் 1000 பேருக்கு சீரான முறையில் எந்தவித குழப்பங்களுமின்றி இலக்க சிட்டைகளை வழங்கி, பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மின்சார பட்டியல்கள் பதிவு செய்யப்பட்டு சமையல் எரிவாயு 1000 பேருக்கு விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியாவில் ஒரு மாதத்திற்கு பின்னர் லிற்றோ சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மாலைதீவு பயணம் விமானப்படை உறுதி செய்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று மாலைதீவுக்கு பயணமானதை கடற்படை தலைமையகம் உறுதி செய்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது பாரியாரும் அவர்களுடன் ஜனாதிபதியின் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று அதிகாலை மாலைதீவுக்கு பயணித்ததாக விமானப்படைத் தலைமையகம் உறுதி செய்துள்ளது. அதன்படி ஜனாதிபதி உள்ளிட்ட மேற்படி குழுவினர் விமானப்படைக்குச் சொந்தமான அண்டனோ 32 (ஏ.என் 32) விமானத்திலேயே நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்கவிலுள்ள விமானப்படை தளத்திலிருந்து மாலைதீவுக்கு பயணித்துள்ளதாகவும் விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பில் விமானப் படையினர் நேற்று விசேட அறிவித்தல் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் படி தற்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க பாதுகாப்பு அமைச்சின் பூரண அனுமதியுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலமைந்துள்ள குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்க பிரிவுகளின் சட்ட திட்டங்களுக்கமைவாக அதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விமானப்படை அதிகாரிகள் விமான நிலையத்திலுள்ள குடிவரவு, குடியகல்வு பிரிவுக்குச் சென்று ஆவணங்களை கையளித்து உரிய அனுமதியை பெற்றுக் கொண்டதாகவும் அந்த அறிவித்தலில் விமானப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் நேற்று அதிகாலை 03 மணியளவில் மாலைதீவின் மாலே நகர் விமான நிலையத்தை ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சென்றடைந்ததாகவும் வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# நுணாவில் ஐ.ஓ.சியில் எரிபொருள் வழங்கல்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் முன்பதிவினை மேற்கொண்ட பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பெற்றோல் வழங்கி வைக்கப்பட்டது.

## தொல்பொருள்... (03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் கலாசாரப் பொருட்கள் மேலும் அழிந்து போவதையோ அல்லது காணமல் போவதையோ தடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

அந்த இடங்களில் உள்ள பெறுமதிமிக்க பொருட்களை பாதுகாக்க கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனநாயகத்துக்கு ... (03ஆம் பக்கத் தொடர்)

ஜனநாயகத்துக்க மதிப்பளித்து செயற்படுவது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து மக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதிப் போராட்டத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் பொறுப்புடன் செயற்படுமாறு தாம் அனைத்து பாதுகாப்புப் பிரிவினரையும் கேட்டுக்கொள்கிறோம். ஜனநாயகத்தை சீரழித்து மக்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ள அவர், ஒன்றோடொன்று முரண்பாடான தகவல்களை அரசு வெளியிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தருணத்தில் அமைதியாக ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து செயற்படுமாறு தாம் நாட்டு மக்களை கேட்டுக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காட்டு யானை... (03ஆம் பக்கத் தொடர்)

ஆலயத்துக்கு செல்லும்போது நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் நின்ற காட்டுயானை தாக்கியதில் சம்பவ இடத்திலே அவர் பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் சடலத்தை பார்வையிட்டபின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

இப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (09ம் திகதி) காட்டு யானை தாக்கியதில் வயல் காவலிலிருந்த விவசாயி ஒருவர் பலியாகியதுடன் அதற்கு முன்னர் சில வாரங்களுக்கு முன் அடைச்சகல் பகுதி ஒருவரும் காட்டுயானை தாக்கி பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

## பதவியிலிருந்து விலகுமாறு

நடவடிக்கைகளை எடுக்குமாறு கட்சித் தலைவர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளனர்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்க கட்சியின் எவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் விரைவில் நிலைமையை சீராக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதியின் இராஜினாமா கடிதம் கிடைத்தவுடன், உடனடியாக பாராளுமன்றம் 15ஆம் திகதி கூடி 19, 20 ஆம் திகதிகளில் தேவையான நடவடுக்கைகளை எடுத்து ஜனாதிபதியை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கை பாராளுமன்றத்தில் செய்துள்ளதாகவும் சபாநாயகர் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.

## நிலைமையை கட்டுப்படுத்த....

நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகங்களை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை முதலே கொழும்பு பிளவர் வீதியிலுள்ள பிரதமரின் அலுவலக பகுதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. நேற்று நண்பகலில் பிரதமர் அலுவலகத்துக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசித்ததையடுத்து நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினரும் பொலிசாரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் தாரை பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சம்பவங்களிலேயே 39 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க இராஜினாமா செய்ய வேண்டுமெனவும் பதில் ஜனாதிபதியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் கோஷம் எழுப்பியவாறு கொழும்பு பிளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களை கலைவதற்காக பொலிசார் பல்வேறு தடவைகள் கண்ணீர்ப் புகை பிரயோகத்தை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதித் தடைகளையும் மீறி பிரதமர் அலுவலகத்துக்குள் பிரவேசித்தனர். நேற்று இரவு வரை தொடர்ச்சியாக அப்பகுதியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச தொலைக்காட்சி, ...

பாதிப்படைந்தன. ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஆகியவற்றுக்குள் பிரவேசித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் ஒரு மணிநேரம் அவற்றை முற்றுகையிட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர் அவற்றின் செயற்பாடுகள் இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டதாக அந்த நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. தேசிய தொலைக்காட்சிகள் மக்களுக்கு சொந்தமானவை என்றும் மக்களின் போராட்டங்களுடன் இணைந்ததாக போராட்ட கருத்துக்கள் ஒளிபரப்பப்பட வேண்டமென்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதன்போது தெரிவித்துள்ளனர்.

அதேவேளை 'மாளிகைகளின் சூழ்ச்சிகள்' முடிவடையும் வரை ஆர்ப்பாட்ட செய்திகள் தவிர்ந்த வேறு செய்திகள் ஒளிபரப்பப்படக் கூடாதென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அதனையடுத்து ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சிகள் ஒரு மணி நேரத்துக்கு இடைநிறுத்தப்பட்டதுடன் பின்னர் வழமைக்குத் திரும்பின. அதனையடுத்து அரை மணிநேரத்தின் பின்னர் சுயாதீன தொலைக்காட்சி சேவையும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டது. அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் உபகரணங்களைப் பாதுகாக்கும் வகையில் நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பாதுகாப்பு படையினரின் உதவியை நாடியிருந்தனர். பொலிசாரும் இராணுவத்தினரும் அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## ஜனாதிபதி மற்றும்...

அடிப்படையற்றது என குறிப்பிட்டுள்ள உயர்ஸ்தானிகரகம், இந்தநிலையில் தொடர்ந்தும், இலங்கை மக்களின் அபிலாஷைகளை அறிந்து ஜனநாயக வழிகளில் இலங்கை மக்களுக்கு உதவியளிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## பிரதமர் ரணில்...

மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்றைய தினத்துக்குள் அந்த கடிதம் தமக்கு கிடைக்கமென்றும் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ஏற்கனவே தம்மிடம் அறிவித்துள்ளவாறு தாம் பதவியிலிருந்து விலகுவதில் எந்த மாற்றங்களும் கிடையதென்பதையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமக்கு அறிவித்துள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்றத்திற்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. மேலதிக பாதுகாப்புக்காக இராணுவத்தின் கமாண்டோ படையினர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

கொழும்பின் முக்கிய கேந்திர நிலையங்களில் நேற்று நிலவிய குழப்பகரமான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்தது.

## அரசியல் பதவிகள்...

கடந்த காலங்களில் சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் நாட்டிற்கும் முக்கியப் பங்காற்ற முடிந்ததாகவும், இந்த இக்கட்டான நேரத்திலும் அந்தப் பணியை தொடர்வதே தனது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

பதில் ஜனாதிபதி பதவிக்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலியா பீரிஸை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி மைத்திரி குணரத்ன, கீர்த்தி தென்னகோன் மற்றும் அசாத் சாலி ஆகிய முன்னாள் ஆளுநர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## அச்சுறுத்தலை தடுக்க முப்படை...

இடமளிக்க முடியாதென்றும் பதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாட்டுமக்களுக்கு விசேட உரையொன்றையாற்றினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்வதையடுத்து ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கடந்த திங்கட்கிழமை கட்சித்தலைவர்கள் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதன்போது எதிர்வரும் வாரத்தில் புதிய ஜனாதிபதியை நியமிப்பது மற்றும் வாக்கெடுப்பு நடத்துவது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அதன்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், தாம் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக அதன்போது தாம் உறுதியளித்துள்ளதாகவும் அதற்கிணங்க கடந்த வெள்ளிக்கிழமை கூட்டத்தில் அதுதொடர்பில் பேசப்பட்டது. அதனையடுத்து போட்டியிட விருப்பமானவர்கள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இதுபோன்றவொரு பின்னணியே நாட்டில் காணப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 12 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். அவர் சபாநாயகரிடம் தமது இராஜினாமா கடிதத்தை கையளிப்பதாக என்னிடம் தெரிவித்திருந்தார். எனினும் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்துள்ள சில தகவல்கள் தொடர்பில் நாம் ஆச்சரியமடைந்தோம்.

அவர் நாட்டிலிருந்து வெளியேறிய பின் நாம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தபோதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சில குழுக்கள் பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட முயற்சித்தனர்.

ஜனாதிபதி மாலைத்தீவுக்கு செல்வதற்காக விமானமொன்றை வழங்கியமைக்காக விமானப் படைத் தளபதியின் வீட்டையும் முற்றுகையிடுவதற்கும் அத்துடன் இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோரின் வீடுகளை முற்றுகையிடுவதற்கும் அவர்கள் தீர்மானித்திருந்தனர். அதன்மூலம் நாட்டின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்பதே அவர்களின் எண்ணம். அத்தோடு பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் வேலைத்திட்டமொன்றை அவர்கள் திட்டமிட்டிருந்தனர். எவ்வாறாயினும் சபாநாயகர் பாதுகாப்பு தொடர்பான முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பாராளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட நடவடிக்கையெடுத்தனர். எனினும் அதனை முற்றுகையிடுவதற்கான எந்த காரணமும் அவர்களுக்குக் கிடையாது.

சட்டப்படி நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டேன். சபாநாயகருடன் இணைந்து புதிய ஜனாதிபதியொருவரை தெரிவுசெய்வதை நிறுத்துவது அவர்களின் நோக்கமாகவிருந்தது. அவர்களுக்கு விருப்பமான ஒருவரை வேட்பாளராக்குவதே அவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

அரசியலமைப்பு பிரயோசனமற்றது என்றும் பாராளுமன்றமும் அவசியமில்லயென்றும் சிலர் தெரிவிக்கின்றனர். அவர்கள் சொல்வதை செயற்படுத்துமாறு அவர்கள் கேட்கின்றனர். நாட்டின் அரசியலமைப்பு, மக்களின் ஆணை, நாட்டின் இறைமை ஆகியன செயற்படுவது பாராளுமன்றத்தின் மூலமே. அந்தவகையில் அரசியலமைப்பை கிழித்தெறிய என்னால் முடியாது.

சிலர் நாட்டில் பாசிஷவாத அரசியல் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். அதற்கு எமது சில அரசியல்வாதிகள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அதனால் தற்போது எழுந்துள்ள நிலமையை கட்டுப்படுத்துவதற்காக அவசர கால சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவுக்கு நான் உத்தரவு பிறப்பிக்கின்றேன். அதேபோன்று மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நான் பணிப்புரை விடுக்கின்றேன். அந்தவகையில், நாம் இந்த பாசிஷவாத அச்சுறுத்தலை இல்லாதொழிக்க வேண்டும். சாதாரண மக்களின் வீடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்து நிலைமையை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கு பாதுகாப்பு பிரிவினருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படையினருக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்த அரசியல் தலையீடும் கிடையாது. முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அறிக்கையொன்றைப் பெற்றுத்தருமாறு நாம் அவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளேன்.

உங்களது பிள்ளைகளை கருத்திற்கொண்டு எமது எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில் சட்டம் மற்றும் அமைதியை பாதுகாக்க வேண்டிய காலமிது. அந்தவகையில் பொலிஸார் மற்றும் முப்படையினருக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு நான் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

## அரச ஊழியர்களுக்கான...

அச்சிடப்பட வேண்டியமையே இதற்கான காரணமாகும். மேலும், அதற்கான அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

இதற்காக, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை நியமித்து தற்போதுள்ள அமைச்சரவையின் அவசர அமைச்சரவை கூட்டத்திற்கு அழைத்து உரிய தீர்மானத்தை எடுப்பதே ஒரே தெரிவாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து விலகினால் அமைச்சரவை கலைக்கப்படும் எனவும், அதற்கமைய, உரிய தீர்மானத்தை எடுப்பதற்கு, மீண்டும் பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அவசர அமைச்சரவை கூட்டத்தை கூட்டினால் மட்டுமே, இம்மாதம் 25ஆம் திகதிக்குள் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியுமெனவும் கூறப்படுகிறது.

அமைச்சரவையின் முடிவு நாணயச் சபைக்கு அனுப்பப்பட்ட பின்னர் பணத்தை அச்சிடுவதற்கு சட்டப்பூர்வமான அனுமதி வழங்கப்படும்.

மேலதிக நேரம், விடுமுறை நாட்கள், வாழ்க்கைச் செலவுகள் என சகல கொடுப்பனவுகளையும் தவிர்த்து சம்பளத்திற்கு மாத்திரம் மாதாந்தம் தேவைப்படும் தொகை சுமார் 29 பில்லியன் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டக்காரர்களை...

மக்களிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகிய இடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்து , அங்கு பெருமளவான மக்கள் நாளாந்தம் வந்து செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்கள் மற்றும் பிற பொதுச் சொத்துகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இந்தக் கட்டிடங்களின் முக்கியத்துவத்திற்கு மதிப்பளிக்குமாறும் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது. சட்டத்தரணிகள்சங்கம் சுமுகமான மற்றும் அமைதியான அதிகார மாற்றத்திற்கான தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும், கட்சித் தலைவர்கள் பின்பற்றும் விரைவான தீர்வு நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# கிழக்கின் குரல்







திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்ற போது,.. படம் காரைதீவு குறூப் நிருபர்

## அக்கரைப்பற்றில் இன்று சமையல் எரிவாயு விநியோகம்

### 880 சிலிண்டர்கள் வழங்க உத்தேசம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் குடும்பங்களுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் இன்று (14) வியாழக்கிழமை காலை அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து வழங்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இத்தினத்தில் சுமார் 880 சிலிண்டர்கள் மாத்திரம் வழங்கப்பட இருப்பதுடன் எரிவாயு வழங்கும் செயற்பாடானது 2022ம் ஆண்டின் ஜூன் மாத மின்சார பட்டியல் பரீசிலிக்கப்பட்டு, அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் என உறுதிப்படுத்தப்பட்டு முதலில் வந்தவருக்கு முன்னுரிமை அடிப்படையில் மட்டுமே எரிவாயு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலை கரையோரங்களில் ஆதிவாசிகளின் பிரச்சினைகள் ஆராய்வு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் வசிக்கும் ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் நுண்நிதி செயற்பாடு மூலம் மாவட்ட பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (12) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலகத்தின் நல்லூர், சந்தோசபுரம் உள்ளிட்ட கரையோரம் சார்ந்த சில கிராமங்களிலும் வெருகல் பிரதேசத்தின் சில கரையோரம் சார் கிராமங்களிலும் ஆதிவாசிகள் வசித்து வருகின்றனர்.

யுத்தத்திற்கு பின்னர் இடம்பெயர்ந்த போது தமது பூர்வீக இடங்கள் இன்னொரு தரப்பினர் மூலம் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றை எமக்கு விவசாயம் செய்ய வழங்க வேண்டும். தமது தனித்துவத்தைப் பேணி செயற்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்துடன் தம் வாழ்வாதார செயற்பாடான தேன் சேகரித்தல் தொழிலை மேற்கொள்ளும்போது வனஜீவராசி திணைக்களத்தால் தடங்கல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் மூதூர் சம்புக்கல்லிக்குளம் சார்ந்த பகுதி வெளித்தரப்பினர்களால் தமது தனியார் காணி என குறிப்பிட்டு மண் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தது. எமது எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அக்குளத்திலே எமது மக்கள் மீன்பிடித்து வாழ்க்கையை நடாத்துகின்றனர். அந்த இடம் தனியாருக்குரியதாயினும் அவர்களுக்கு மாற்றுக்காணியை வழங்கி இக்குளத்தில் தம் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள உதவேண்டும் என இதன்போது கலந்து கொண்ட ஆதிவாசியொருவர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் குறித்த விடயங்களை கவனத்திற்கொண்டதுடன் உரிய விடயங்கள் தொடர்பில் அவதானத்தை செலுத்துமாறு இதன்போது உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

# கல்முனையில் சிறிய வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் சேவை மட்டுப்படுத்தல்

## வைத்திய சேவைகளை முன்னெடுப்பதில் பாரிய சிரமம்

ஒலுவில் விசேட நிருபர்

நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சிறிய வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

எரிபொருள் பற்றாக்குறையினால் மின்சாரம் தடைப்படும் போது வைத்தியசாலைகளிலுள்ள ஜெனரேட்டர்களை பாவனைக்குட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் சில வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

ஆதார, மாவட்ட வைத்தியசாலைகளின் அம்பியூலன்ஸ் சேவைகள் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களுக்கு கிழக்கு மாகாண சபையினால் எரிபொருளுக்காக வழங்கப்படுகின்ற நிதி தற்பொழுது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

பல நெருக்கடிகளுக்க மத்தியில் சில சிறிய வைத்தியசாலைகளில் அத்தியாவசிய சேவைகளான கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கிளினிக், சிறுவர்களுக்கான கிளினிக் போன்றவை வழமை போன்று இயங்குவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கான சுகாதார சேவையினை வழங்க வேண்டியுள்ளது.

குறிப்பாக கர்ப்பவதியான தாய்மார்கள் சிறுபிள்ளைகளுக்கான கிளினிக்குகள் மற்றும் அவர்களுக்கான மாத்திரைகள் முறையாக வழங்குதல் போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. கர்ப்பிணி தாய்மார்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு மக்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதோடு ஓரிரு மரணங்களும் சம்பவித்த துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள பொதுச் சுகாதார மாது, வாகன உரிமையாளர்கள் மற்றும் கிராம சேவக உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள மதத் தலைவர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு சுகாதார குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## திருகோணமலை இ.போ.ச ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பில்





றொட்டவெவ குறூப் நிருபர்

இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை சாலை ஊழியர்கள் தங்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரி நேற்று (13) பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இப் போராட்டம் நேற்று (13) ஆரம்பிக்கப்பட்டது. 'அத்தியாவசிய சேவையாளர் எமக்கு எரிபொருள் எங்கே எரிபொருள் கிடைக்கும் வரை தொடர் வேலை நிறுத்தம்' 'அதிகாலையில் பணிக்கு வந்து இரவிலே வீடு செல்லும் நாங்கள் எரிபொருள் பெற்றுக் கொள்வது எவ்வாறு' 'வழங்கு வழங்கு எமக்கு எரிபொருளை வழங்கு' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு திருகோணமலை போக்குவரத்து சபை ஊழியர்கள் கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## காத்தான்குடியில் 200 வருடம் பழைமை வாய்ந்த மரம் தீக்கிரை

மட்டக்களப்பு குறூப் நிருபர்



மட்டக்களப்பு காத்தான்குடியில் நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மரமொன்றில் நேற்று முன்தினம் மாலை தீ பரவியதால் மரம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

காத்தான்குடி 6ம் குறிச்சி அப்துல் ஜவாத் அலீம் வீதியிலுள்ள காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் ஜும் ஆ பள்ளிவாயல் மைய்ய வாடியிலேயே இந்த மரம் இருந்தது.

குறித்த மரத்தின் கிளைகள் அகற்றப்பட்ட நிலையில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. தீயை பொது மக்கள் அணைத்துள்ளனர். எனினும் மரம் முற்றாக எரிந்துள்ளது. இதே போன்று இந்த மைய்ய வாடியின் மற்ற பகுதியிலும் இன்னுமொரு மரத்திலும் தீ பரவல் ஏற்பட்டு அந்த மரமும் எரிந்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

## யானை தாக்கியதில் நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி

### உன்னிச்சையில் சம்பவம்



மண்டூர் தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில்

செவ்வாய்கிழமை இரவு (12) காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் பலியாகியதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயித்தியமலை வடக்கில் வசித்து வரும் கோயில் போரதீவைச் சேர்ந்த(54 வயதுடைய) முண்டாப்போடி விஜயராசா என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்

ஆயித்தியமலையில் உள்ள தனது வீட்டிலிருந்து உன்னிச்சை மாரியம்மன் ஆலயத்திற்கு

செல்லும்போது நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் நின்ற காட்டுயானை தாக்கியதில் சம்பவ இடத்திலே குறித்த நபர் பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வருகின்றது.

பொலிஸாரின் வேண்டுகோளுக்கமைவாக சம்பவ இடத்திற்கு வந்த பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் சடலத்தை பார்வையிட்டபின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிட்டுள்ளார்

இச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (09ம் திகதி) காட்டு யானை தாக்கியதில் வயல் காவலில் இருந்த விவசாயி ஒருவர் பலியாகியதுடன் அதற்கு முன்னர் சில வாரங்களுக்கு முன் அடைச்சகல் பகுதியில் ஒருவரும் காட்டுயானை தாக்கி பலியாகியமை குறிப்பிடத்தக்கது

## மட்டக்களப்பு விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக கரம்கொடுத்துதவும் வர்த்தகர் தேசபந்து செல்வராஜா



கல்லடி குறூப் நிருபர்

விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி தொடர்ந்து வருகின்ற நாட்களிலும் டீசலினை வழங்குவதற்கு தான் தயாராக உள்ளதாக மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சங்கத்தின் தலைவரும், தொழில் அதிபருமான தேசபந்து எம்.செல்வராஜா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் ஏற்கனவே இரண்டு தடவைகளில் விவசாயிகளுக்கு முன்னுரிமையடிப்படையில் 3500 லீற்றர் டீசலினையும், 50 விவசாயிகளுக்கான பெற்றோலினையும் வழங்கியிருந்ததுடன், மாவட்ட விவசாயிகளிடம் நன்மதிப்பை பெற்றுள்ளது மட்டுமல்லாது தொடர்ச்சியாக விவசாயிகள் தமது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்து வருகின்றனர்.

நாடு பூராகவும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் அனைத்து தரப்பினரும் பாரிய இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையமானது தொடர்ச்சியாக ஒரு வார காலமாக நாளாந்தம் எரிபொருளை வழங்கி வருகின்றமையானது, மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு கிடைத்த வரமாகவே குறித்த எரிபொருள் நிலையத்தையும் அதன் உரிமையாளரையும் பார்ப்பதாக மாவட்ட புத்திஜீவிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## மட்டு.விவசாயிகளுக்கு நேற்றும் எரிபொருள் விநியோகம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நேற்று (13) புதன் கிழமை டீசல் வழங்கப்பட்டது. ஆரையம்பதி ஐந்தாம் கட்டையிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் விவசாயிகளுக்கு இந்த டீசல் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இந்த டீசல் வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார். இதன் போது அதிகாரிகள், விவசாய சங்கங்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

அறுவடைக்காக காத்திருந்த விவசாயிகளுக்கும், அதே போன்று உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டு அறுவடை செய்யும் விவசாயிகளுக்கும் இந்த டீசல் வழங்கப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக செய்கையாக 32,600 ஏக்கர் நிலம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் நான்கின் ஒரு பகுதி மடங்கு டீசல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் மூன்று மடங்கு விவசாயிகளுக்கு இந்த டீசல் வழங்கப்படவுள்ளது.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 14



**குறள் தரும் சிந்தனை**

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்

*மனம் தளராமல் ஆராய்ந்து துணிந்து ஏற்றத் தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.*

# மக்களின் நலன்களுக்கு குந்தகம் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும்

நாடு கடந்த சில மாதங்களாக முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் கொதிநிலை வரை வளர்ச்சி பெற்றுள்ளது. இந்நிலையில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் காரணமாக அரச நிர்வாக செயற்பாடுகளுக்கும் சேவைகளுக்கும் இடையூறுகளும் பாதிப்புகளும் ஏற்படக் கூடிய நிலைகளும் உருவாகியுள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் ஏற்கனவே பலவித அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில், மணித்தியாலயக் கணக்கில் காத்திருக்கும் நிலைக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு பொருளாதார நெருக்கடியின் பலவித அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில், முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் அவர்களை மேலும் அசௌகரியங்களுக்குள் தள்ளிவிடும் வகையில் அமைந்திருப்பதாக மக்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் பிரதேசங்களில் பயணிகள் போக்குவரத்து சேவைகள் கடுமையான நெரிசல்களை எதிர்கொண்டுள்ளன. இதன் விளைவாக பயணிகள் மணித்தியாலயக்கணக்கில் பஸ் வண்டிகளுக்குள், வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இதன் காரணத்தினால் வைத்தியசாலைகளிலும் ஏனைய பொதுநிறுவனங்களிலும் உரிய நேர காலத்தில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத அசௌகரியங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

இவை இவ்வாறிருக்க, நாட்டின் நிர்வாக செயற்பாடுகளுக்கும் பொது சேவைகளும் கூட இடையூறுகளும் பாதிப்புகளும் கூட ஏற்படக் கூடிய வகையில் நிலைமை அமைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனநாயக நாடு என்ற வகையில் தம் கோரிக்கைகளின் நிமித்தம் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுப்பதற்கு உரிமைகள் காணப்படுகின்றன. ஆனால் மக்கள் அசௌகரியங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாக்கும் வகையில் நிலைமை அமைந்து விடக் கூடாது. இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக இந்நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சில வாரங்களுக்கு பின்னர் தற்போது நாட்டுக்கு எரிபொருள் கிடைக்கப் பெற்றுள்ளது. அதனைப் பாவனையாளர்களுக்கு விரைவாகவும் துரிதாமாகவும் கிடைக்கப்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கைகளுக்கும் கூட இந்த ஆர்ப்பாட்டங்கள் சில பிரதேசங்களில் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளன. இது மக்கள் ஏற்கனவே முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவே காணப்படுகின்றது.

அந்நிய செலாவணி பற்றாக்குறை அசௌரியங்களுக்கு முகம் கொடுத்துள்ள சூழலிலும் பலவித சிரமங்களுக்கு மத்தியில் எரிவாயுவைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருந்தும் எரிவாயுவுக்காக பல நாட்களாகக் காத்திருக்கும் மக்களுக்கு அதனை பெற்றுக் கொடுப்பதற்கும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடையூறாக அமைந்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஜனநாயக நாட்டில் தங்களது கோரிக்கைகளுக்காக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க உரிமைகள் இருப்பது போன்று மக்கள் தங்களது சேவைகளை இடையூறுகள் இன்றி பெற்றுக் கொள்ளவும் உரிமைகளைப் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் சர்வமதத் தலைவர்கள், மக்கள் தமக்குரிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய உரிமைகளை பாதிக்கக் கூடிய வகையில் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும், சட்டம், ஒழுங்கை மதித்து செயற்படத் தவற வேண்டாம் என்றும் எந்த சந்தர்ப்பத்திலும் வன்முறைகள் மற்றும் கலவரங்களை நாட வேண்டாம் என்றும் பொறுமையுடனும் தூர நோக்குடனும் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். இதே வேண்டுகோளை அரசியல் கட்சிகளின் தலைவர்களும் விடுத்திருக்கின்றனர்.

இவற்றின் ஊடாக தற்போது முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் மக்களின் இயல்பு வாழ்வில் எவ்வளவு தூரம் தாக்கங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தி இருக்கின்றன என்பது தெளிவாகின்றது. நாடும் மக்களும் பொருளாதார நெருக்கடியின் பலவித அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில், நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படத் தவறலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இவ்விடயங்களில் கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் நாடும் மக்களும் மேலும் நெருக்கடிகளுக்கு உள்ளாகவே நேரிடும்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவது ஒவ்வொருவரது பிரஜையினதும் கடமையும் பொறுப்பும் ஆகும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# காலத்துக்கேற்ற தீர்வாக துவிச்சக்கரவண்டியை மாற்றியமைத்துள்ள காரைதீவு இளைஞன் தரணி

இன்றைய எரிபொருள் பிரச்சினையைச் சமாளிக்கும் முகமாக மோட்டார் சைக்கிளுக்குப் பதிலாக மோட்டார் பூட்டிய துவிச்சக்கர வண்டியை கண்டுபிடித்திருக்கின்றார் காரைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் தரணிதரன் என்கின்ற இளைஞர் . இவர் மின்சார இலத்திரனியல் உபகரணங்களை பழுது பார்த்தல் தொழிலையும் செய்து வருகின்றார். இவர் சம்மாந்துறை நீதிமன்றத்தில் பணியாற்றி வருபவராவார்.

இந்த புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்ததன் மூலம் அவர் இன்று பரபரப்பாகி விட்டார். துவிச்சக்கர வண்டியிலே மோட்டார் ஒன்றைப் பொருத்தி அதற்கான ஏனைய தொழில்நுட்ப வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையை ஒத்ததாக இந்த கண்டுபிடிப்பு உள்ளது. அந்த இளைஞர் இவ்வாறு விளக்கம் தந்தார்.







"இதற்குரிய மோட்டாரை இணையதளத்தின் உதவியுடன் பெற்றுக் கொண்டேன். ஒரு மோட்டாருக்கு 16 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதை விட இரண்டு பற்றரிகள் 20,000 ரூபா. அவ்வளவு தான் இதை தயாரிப்பதற்கு தேவையானவையாகும்.

இந்த மோட்டார் பூட்டிய துவிச்சக்கரவண்டி நாள் ஒன்றுக்கு 60 கிலோ மீட்டர் தொடக்கம் 70 கிலோ மீட்டர் தூரம் பயணிக்கக் கூடியது. 40 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கலாம். சிலவேளை மோட்டார் பழுதாகினால் காலால் மிதித்தும் பயணம் செய்யக் கூடிய கட்டமைப்பு இருக்கின்றது.

ஒட்டி பொருத்தும் வேலைகளை கண்ணன் அண்ணா செய்து உதவினார். மேலும் இரும்பு விற்கும் கடையில் இருந்து பழைய சிறிய மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி அதனையும் வடிவமைத்து வருகிறேன். இதனைக் கண்டுபிடித்த நாளிலிருந்து அதிகளவு தொலைபேசி அழைப்புகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. தேவையான அளவுக்கு செய்து கொடுக்கலாம். அதற்கான ஆலோசனையும் வழங்கலாம்."

இவ்வாறு தெரிவித்தார் காரைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் தரணிதரன்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# திருமலை மாவட்ட பின்தங்கிய பிரதேசங்களின் ஏழு பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள்

அவுஸ்திரேலியாவில் இயங்கும் வன்னி ஹோப் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் இரட்ணம் பவுண்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் பின்தங்கிய கிராமங்களில் உள்ள ஏழு பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக கைளிக்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.





திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆதிகோ ணேஸ்வரா மகாவித்தியாலயம், குளக்கோட்ட ம் தமிழ் வித்தியாலயம், முத்துநகர் மு ஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலை, முள்ளிப்பொத்தானை விக்னேஸ்வரா வித்தியாலயம், பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம், கன்னியா இராவணேஸ்வரா வித்தியாலயம் மற்றும் கோபாலபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய ஏழு பின் தங்கிய பாடசாலைகளுக்கு தலா ஆறு இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட திறன் வகுப்பறைகள் வழங்கி வைக்கப்பட்டன.






கிராமப்புறங்களில் டிஜிட்டல் கல்வி யை அனைவரும் பெற்றுக் கொ ள்ள வேண்டும் எனும் நோக்குடன் வழங்கப்பட்ட திறன்வகுப்பறை திறப்பு விழா நிகழ்வில் அவுஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்திருந்த 'வன்னி ஹோப்' நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் சிவஞானசுந்தரம், வைத்தியர் மாலதி வரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், மக்கள் சேவை மன்ற உத்தியோகத்தர்கள், பெற்றோர், பாடசாலை நலன்புரி உறுப்பினர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வன்னி ஹோப், இரட்ணம் பவுண்டேஷன் நிதிப்பங்களிப்பு**

# மக்களின் கல்வி, பொருளாதார மீட்சியில் கைகொடுக்கும் கிழக்கு பல்கலைக்கழகம்

சமூகம் மற்றும் தொழில்சார் துறைகளை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் நிலையத்தின் திறப்புவிழா கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் அண்மையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில், நிலையத்தின் இயக்குனர் வைத்திய கலாநிதி கந்தசாமி அருளானந்தம் வழிநடத்தலில் நடபெற்ற நிகழ்வில் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் மற்றும் ஏனைய நிலையங்களின் இயக்குனர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் தலைமை உரையில், பல்கலைக்கழகம் தான் சார்ந்த சமூகத்தை புரிந்து செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றியும், இவ்வாறான ஓர் சேவை பல்கலைக்கழகத்தின் மூலம் இதுவரை வழங்கப்படாத இடைவெளி உள்ளதாயும், தற்கால பொருளாதார சூழலில் எவ்வாறு





தனது சமூக பொறுப்பை கையாள வேண்டும் என்பது பற்றியும் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெளிவுபடுத்தினார்.

இந்நிலையத்தின் தற்கால தேவைப்பாடு மற்றும் ஆரம்பித்துள்ள செயற்பாடுகள் பற்றியும், சமூக மற்றும் தொழிற்றுறை சார் முன்னெடுப்புகள் , ஒன்றிணைந்த மாதிரிக்கிராம வேலைத்திட்டம் தொடர்பாகவும் நிலையத்தின் இயக்குனர் வைத்திய கலாநிதி கந்தசாமி அருளானந்தம் கருத்துரை வழங்கினார்.

சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட ஏறாவூர் பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஸ்ரீநாத், தமது பூரண ஒத்துழைப்பை இந்நிலையத்தின் செயற்பாடுகளுக்கு வழங்குவதாகவும், தற்கால சூழலில் ஏற்படக் கூடிய மந்தபோஷாக்கு நிலைமை பற்றியும் அதற்கு இந்நிலையத்தின் பங்களிப்பு பற்றியும் விரிவாக விளக்கினார்.

பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான மரக்கறி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு அங்கு இடம்பெற்றிருந்தது.

பொதுமக்கள் தமது எவ்விதமான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் கள விஜயங்களையும் பல்கலைக்கழகத்தின் மூலம் பெறலாம் என்பதோடு, பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைக்கும் இப்பணியானது சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் நீண்டு தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

# ஸ்டாலினுக்காக மக்காவில் விசேட துஆ பிரார்த்தனை



சவூதி அரேபியாவின் மக்கா நகருக்கு ஹஜ் புனித யாத்திரை சென்றிருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மகளிரணி தலைவர் முசாபர் பாத்திமா, முதல்வர் ஸ்டாலினுக்காக அங்கு சிறப்பு துஆ பிரார்த்தனை செய்திருக்கிறார். கொரோனா பாதிப்பிலிருந்து ஸ்டாலின் விரைந்து நலம் பெற வேண்டுமென அவர் தனது புனித பயணத்தின் போது இந்த பிரார்த்தனையை செய்திருக்கிறார்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் முன்னாள் தலைவர் மறைந்த அப்துல் சமதுவின் மகள்தான் பாத்திமா முசாபர் ஆவார். சென்னை மாநகராட்சி எழும்பூர் பகுதி கவுன்சிலராக அவர் உள்ளார். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மகளிரணி தலைவராகவும் அவர் இருக்கிறார். அவர் சில நாட்களுக்கு முன்னர் ஹஜ் யாத்திரை மேற்கொண்டார்.

முதல்வர் ஸ்டாலின் கொரோனாவில் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற தகவலறிந்து அங்கு சிறப்பு துஆ செய்து ஸ்டாலின் நலம் பெற வேண்டியிருக்கிறார். முசாபர் பாத்திமாவின் தந்தை அப்துல் சமது கருணாநிதியுடன் மிகவும் நெருக்கமாக இருந்து அரசியல் செய்தவர். அவரது காலம் தொட்டு ஸ்டாலின் குடும்பத்தினருடனும் முசாபர் பாத்திமா நட்பு பேணி வருகிறார்.

ஹஜ் பயணத்தின் போது ஹாஜிகள் கேட்கும் து ஆ (பிரார்த்தனை) இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கையாக உள்ளது. உலகம் முழுவதும் இதேபோல் உலகின் பல நாடுகளில் இருந்தும் முதல்வர் ஸ்டாலின் கொரோனாவிலிருந்து மீள வேண்டும் என சமூக வலைதளங்களில் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதேபோல் தலைவர்கள் பலரும் ஸ்டாலின் பூரண நலம் பெற வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்திக் கொண்டாலும் கூட, தொலைபேசி வழியாக ஆட்சி நிர்வாக பணிகள் பற்றி அதிகாரிகளிடம் கேட்டறிந்து வருகிறார் முதல்வர். அதேபோல் தனது பெயரிலான அறிக்கைகளையும் அவர் வெளியிட்டு வருகிறார்.

# பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்













படங்கள்: துஷாரா பெர்ணாண்டோ

NLB NATIONAL LOTTERIES

நாள் தோறும்
பல லட்சாதிபதிகளை உருவாக்கும்
அதிகம் வெற்றி வாய்ப்புகள் உள்ள
ஒரே ஒரு லொத்தர்.

JATHIKA SAMPATHA
ஜாதிக சம்பத

யூன் மாதத்தில்
மாத்திரம் ஒரு கோடியே
பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு
அதிர்ஷ்டசாலிகளை உருவாக்கியுள்ளோம்

அதில் சுப்பர் பரிசு ரூபா (12,089,290.40)
ஒரு அதிர்ஷ்டசாலி
பத்து இலட்சம் ரூபா 11அதிர்ஷ்டசாலிகள்
ஒரு இலட்சம் ரூபா 45 அதிர்ஷ்டசாலிகள்!



ஆறு இலக்கங்கள் வலமிருந்து அல்லது இடமிருந்து
அல்லது எவ்வாறு பொருந்தினாலும் உங்களுக்கு வெற்றி
லக்னத்துடன் ஆறு இலக்கங்கள் பொருந்தினால்
வெற்றிக்கு மேல் வெற்றி.

வாரத்தில் ஏழு நாட்களும் உங்களை வெற்றிபெற செய்யும்





கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகலிங்கம் யோகேந்திரலிங்கத்தினது 50 ஆண்டு கால ஊடக மற்றும் இலக்கியப் பணிகளை பாராட்டும் நிகழ்வு கொழும்பு தமிழ் சங்கத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

உடுவை எஸ். தில்லை நடராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், கனடா உதயன் பத்திரிகையின் இலங்கை சிறப்பு இதழின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

அத்துடன் இலங்கை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இளைஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் யோகேந்திரலிங்கத்தை கௌரவித்தனர். இந்த வைபவத்தில் சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள், மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ், சிரேஷ்ட எழுத்தாளர் கலாநிதி. சிவலிங்கம் சதீஷ்குமார், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

படம் கொழும்பு வடக்கு நிருபர்

## மரண அறிவித்தல்

மலர்வு 11.11.1922



உதிர்வு 12.07.2022

**அமரர் வீ. அழகப்பன்**

சனிக்றோப்ட் வஹாரக்கயில் வசித்தவரும், இராஜகிரியவை இருப்பிடமாக கொண்டவருமான **திரு. வீரப்பன் அழகப்பன்** அவர்கள் 12.07.2022 அன்று இறையடி சேர்ந்தார்.
அன்னாரின் பூதவுடல் இல.119, கொடுவேகொட, புத்கமுவ வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 14.07.2022 வியாழக்கிழமையன்று ஈமக்கிரியை நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பொறளை இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அன்னாரின் பிரிவால் வருந்தும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்.
0777312203, 0777720294**

எரிசக்தி அமைச்சு

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### நீடிப்பு அறிவித்தல்

**யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுடைய 02 எண்ணிக்கையான எரிபொருள் நிரப்பிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல்**

**B/25/2022**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-07-08ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது தற்போது 2022-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-11-14ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022-12-12ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமிற்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),
பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு-09,
தொலைபேசி: 011-5455331
தொலைநகல்: 011-5455424**

நெஷனல் டிவலப்மென்ட் வங்கி பிஎல்சி
வாடிக்கையாளர்கள் அனைவருக்குமான அறிவித்தல்

(முன்னர் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி, ABN AMRO வங்கி கொழும்பு கிளை மற்றும் வரையறுக்கப்பட்ட NDB வங்கி.)

## கைவிடப்பட்ட சொத்துகளுக்கான சட்டபூர்வ அறிவிப்பு

வங்கிச்சட்ட மூலம் 72 முதல் 76 பிரிவுகளுக்கு அமைவாக, 2021 டிசம்பர் 31ம் திகதியுடன் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்த செயற்பாடற்ற கணக்குகள், கைவிடப்பட்ட சொத்துகளாக நெஷனல் டிவலெப்மென்ட் வங்கியினால் அறிக்கையிடப்பட்டு, இலங்கை மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கைவிடப்பட்ட சொத்துகளாக கருதப்படும் தனிநபர் கணக்குகள்/ஆவணங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் கைவிடப்பட்ட சொத்துகளின் பாதுகாப்பு கருதி இங்கு குறிப்பிடப்படவில்லை. காரணம் இத்தகவல்களைப் பயன்படுத்தி விரும்பத்தகாதவர்கள் இச்சொத்திற்கான உரிமையை கோர முடியும் என்பதால் ஆகும்.

கைவிடப்பட்டதாக கருதப்படும் சொத்துகளின் உரிமையாளர்களுக்கு, வங்கியினால் அவர் இறுதியாக அறியத்தந்திருந்த முகவரிக்கு குறித்த சொத்துகளின் விபரங்கள் பற்றி தெரிவிக்கும் ஒரு பிரத்தியேக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் கைவிடப்பட்ட சொத்துகளாக கருதப்படும் உங்கள் கணக்கின் கீழ் காணப்படும் நிலுவைத்தொகையினை மீளக்கோர விரும்பினால், நாடளாவிய ரீதியில் உள்ள எமது கிளைகளுக்கு, வழமையான வங்கி நேரத்தில் உங்கள் தனிநபர் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தாருங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 744 8888.**

**உள்நாட்டு நாணயம்**

| சொத்தின் வகை | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| சேமிப்புக் கணக்குகள் | 3793 |
| நடைமுறைக் கணக்குகள் | 35 |
| கொடுப்பனவுக் கட்டளை | 90 |

**வெளிநாட்டு நாணயம்**

| சொத்தின் வகை | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| வங்கி வரைவோலை | 13 |
| சேமிப்புக் கணக்குகள் | 104 |
| நடைமுறைக் கணக்குகள் | 02 |

011 744 8888 www.ndbbank.com

NDB வங்கி

# நகர்வலம்



## அநுராதபுரம் மாவட்டத்தில்

# வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை வேலைத்திட்டம் ஆரம்பம்

### மாவட்டத்தின் 6940 தோட்டங்களில் இவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை



**திறப்பனை தினகரன் நிருபர்**

சமுர்த்தி திணைக்களத்தினால் தேசிய பயிர்ச் செய்கை நடவடிக்கையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவின் களு ஆரச்சியாகம கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ. வசந்த மற்றும் நொச்சியாகம பிரதேச செயலாளர் அசங்க ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 55 சமுர்த்தி வங்கிகளிலும் தோட்டப் பயிர் உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டத்தில் உள்ள 694 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் 10 மாதிரி வீட்டு தோட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதுடன் மாவட்டதின் 6940 தோட்டங்களில் இவற்றை நடைமுறைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நொச்சியாகம பிரதேச செயலக பிரிவின் களு ஆரச்சியாகம கிராமத்தில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்ட சமுர்த்தி திணைக்கள மாவட்ட பணிப்பாளர் டபிள்யு ஏ.வசந்த, பிரதேச செயலாளர் அசங்க ரத்நாயக்க உட்பட அதிகாரிகள் பொது மக்கள் என பலர் நிகழ்வில் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நட்டிவைத்தனர்.

## ஹெரோயின் வைத்திருந்த வைத்தியர்;

# நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது 19வரை விளக்கமறியல் நீடிப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 19 ஆம் திகதி வரைக்கும் விளக்க மறியலில் வைக்கும்படி அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர் இலங்கை வைத்திய சபையினால் பதிவு செய்யப்பட்ட அநுராதபுரம் நகரில் தனியார் மருத்துவ நிலையமொன்றினை நடாத்திச் சென்ற 69 வயதுடைய அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட வைத்தியர் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய குறித்த வைத்தியர் பயணித்த வானை பின் தொடர்ந்துசென்றுபரிசோதனைக்குட்படுத்தியபோது 02 கிராம் 270 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை கைப்பற்றியதுடன் சந்தேக நபரான வைத்தியரையும் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருவளை பொலிஸ் பிரிவு;

# ஆலோசனை சபை உறுப்பினராக இக்பால் சம்ஸுத்தீன் நியமனம்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை பொலிஸ் நிலைய பொதுமக்கள் பிரிவின் ஆலோசனை சபையின் ஆலோசகர்களிலொருவராக பேருவளை இக்பால் சம்ஸுத்தீன் களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஜே.ஏ. விஜேசுந்தரவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பேருவளை அப்ரார் கல்வி நிலைய செயலாளரும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் மற்றும் பெலஸ்பாத் ஷாதுலிய்யா ஸாவியா நிர்வாக சபைத் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார். இவருக்கான நியமனக் கடிதத்தை பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார அண்மையில் பொலிஸ் நிலையத்தில் வைத்து கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதி விபத்துகளில் 62 பேர் மரணம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் இந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் 30 ஆம் திகதி வரையிலான ஆறு மாத காலப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 62 பேர் மரணமடைந்துள்ளதாக அநுராதபுரம் மாவட்ட கோட்ட மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இந்த மரண வீதி விபத்துக்களில் அதிகபடியானவை அநுராதபுரம் பொலிஸ் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் 12 வீதி விபத்துக்களில் 14 பேர் மரணமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிலோன் ஆட்டோமொபைல் சங்க 117வது பொதுக்கூட்டம்




சிலோன் ஆட்டோ மொபைல் சங்கத்தின் 117வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் ஏராளமான உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். இதன்போது நடப்பு ஆண்டின் புதிய உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் தம்மிக்க ஆட்டிகல, உப தலைவர்கள் ஆனந்த தங்கல்ல, கீர்த்தி குணவர்தன செயற்குழு உறுப்பினர்களாக; எஸ். வி. கணேஷ், பி.எச். லியனகே ஜே.பி., பி.பி. குலதுங்க, எஸ். மன்னப்பெரும ஜே.பி., கலாநிதி விஜய கொரியா, ஹர்ஷ பண்டுவாவல, தம்பிய பனகல, எஸ். ரவி, விக்கிரம ஆர் புஞ்சிஹேவா (சட்டத்தரணி), பிரசன்ன டி சொய்சா, லசித குணரத்ன மற்றும் எம் ஆர் எம் பாரூக் தலைவராக இருந்து சங்கத்தின் தலைவர் ஜனநாயகக் கட்சியின் தலைவரின் பெயரை முன்மொழிந்தார்.

சங்கத்தின் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் பியங்கர ஜயரத்ன எம்.பி (வாழ்நாள் உறுப்பினர்) மற்றும் தேசமான்ய சாசன கீர்த்தி, இலங்கை புத்திர நந்ததாச ராஜபக்ஷ (வாழ்நாள் உறுப்பினர்) எமரிட்டஸ் தலைவர் டி.எஸ்.ஐ. துணை பொருளாளர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

# "முதலில் இலங்கையை தேசிய முன்னுரிமை வழங்கும் நிகழ்ச்சி நிரலைக் கொண்ட நாடாக மாற்றுங்கள்"

### கூட்டு ஆடைகள் சங்க மன்றம் (JAAF) கோரிக்கை

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும், அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் கூடிய சர்வ கட்சி அரசாங்கத்தை விரைவில் உருவாக்குவதற்கும் தேர்தலை நடத்துவதற்கும் வழி செய்ய வேண்டுமெனவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அனைத்துக் கட்சித் தலைவர்களும் அமுல்படுத்துமாறு கூட்டு ஆடைகள் சங்க மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும் அரசியல் முறைமை சீர்திருத்தம் குறித்த வேண்டுகோள் தொடர்பிலும் JAAF மீண்டும் இதன்போது கவனம் செலுத்தியுள்ளது.

"இலங்கையின் வரலாற்றில் மிகவும் சவாலான மற்றும் நெருக்கடியான இந்த சூழ்நிலையில், நமது நாடு எதிர்கொண்டுள்ள இந்த துயரமான நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் இலங்கையை கட்டியெழுப்புவதற்கும் நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதற்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டமான சூழ்நிலையை நாங்கள் முழுமையாக புரிந்துகொள்வதுடன், தங்கள் போராட்டங்களை வன்முறையின்றி நடத்தவும் பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் சட்டம் ஒழுங்கை பேணி பாதுகாப்பதுடன் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறு பாதுகாப்புப் படையினரைக் கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மிருகங்கள் விவசாய செய்கைகளை நாசம் செய்வதாக புகார்

**பேருவளை விஷேட நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் பல பகுதிகளிலும் குரங்குகள், காட்டுப் பன்றிகள், மர அணில் போன்ற மிருகங்கள் விவசாய பயிர்ச் செய்கைகளை அடிக்கடி நாசம் செய்து வருவதாக பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்ற விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாழை, மிளகாய், பயற்றங்காய், வெண்டி, தக்காளி, மரவெள்ளி உட்பட பல பயிர்கள் இவ்வாறு இரவு நேரங்களில் மிருகங்களினால் நாசம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குரங்குகள் மரங்களிலுள்ள பழங்களை நாசம் செய்வதோடு மக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மிருகங்களின் இவ்வாறான அட்டகாசத்தினால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# அபராதப்பணம் அறவிடாமல் புதிய அனுமதிப்பத்திரம்

### தென் மாகாண மோ.வா.போ. ஆணையாளர் தெரிவிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக தென் மாகாண வாகன உரிமையாளர்களுக்கு சலுகை வழங்கும் முகமாக ஜூன் மாதம் 30ம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 29ம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் காலாவதியாகும் வாகன அனுமதிப் பத்திரங்களுக்கு அபராதப் பணம் அறவிடாமல் புதிய அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் சீ. விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் புகைப்பரிசோதனை சான்றிதழ் மற்றும் வாகன உறுதிப் பத்திரம் ஆகியவையும் ஜூன் மாதம் 30ம் திகதியிலிருந்து ஜூலை 29ம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில் காலாவதியாகும் பட்சத்தில் அதனையும் கருத்திற் கொண்டு சலுகை காலம் வழங்கப்படவுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

# துவிச்சக்கர வண்டி திருட்டு அதிகரிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம பகுதியில் துவிச்சக்கர வண்டிகளின் திருட்டு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எரிபொருள் நெருக்கடி காரணமாக அதிகமானோர் தற்போது துவிச்சக்கர வண்டிகளையே பாவிக்கின்றனர். இதனால் துவிச்சக்கர வண்டிகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில் திருட்டும் அதிகரித்துள்ளது.

பூட்டுப்போட்டு விட்டுச்சென்றாலும் திருடப்படுகின்றன. அதேவேளை, துவிச்சக்கர வண்டிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. திருட்டில் ஈடுபடுவோர் முகக்கவசம் (மாஸ்க்) அணிந்தே திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுகின்றனர். எனவே, துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

# நாட்டை பொறுப்பெடுக்கத் தயாரென அநுரகுமார தெரிவித்திருப்பது வேடிக்கையானதாகும்



**முபாரக் அப்துல் மஜீத்**

நாட்டின் இன்றைய சூழலில் நாட்டை பொறுப்பெடுக்கத் தயார் என ஜேவிபி தலைவர் அநுர குமார திசாநாயக்க சொல்லியிருப்பது மிகவும் தாமதமாக ஏற்பட்ட ஞானமாகும். இந்த அறிவு எப்போதோ ஏற்பட்டிருந்தால் நாட்டின் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் ஜேவிபி வந்திருக்கும் என உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்த போது ஜேவிபியினர் அவரது கட்சியுடன் இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக 30க்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினரை பெற்றனர். சிலர் அமைச்சர்களாகவும் இருந்தனர். அதன் பின் அவருடன் முரண்பட்டு ஆட்சியில் இருந்து விலகினர். கூட்டு சேராமல் தனித்து இயங்குவதன் மூலம் தனிக் கட்சியாக ஆட்சியை பிடிக்க முடியும் என கனவு கண்டு கடைசியில் இப்போது மூன்று எம்பிக்களுடன் உள்ளனர்.

ஒரேயொரு உறுப்பினரான ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருப்பது ஜனநாயகமா என கேட்டவர்கள் மூன்று உறுப்பினரை மட்டும் கொண்ட ஜேவிபியிடம் நாட்டை கொடுப்பது ஜனநாயகமா என கேட்டால் அதற்கு பதில் என்ன?

ஜேவிபியினரின் அரசியல் என்பது நெளிவு சுளிவு அற்ற இறுகிய போக்காகும். இதற்கு காரணம் அக்கட்சியின் அரசியல் யாப்பாகும்.

நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால் தமது இறுக்கமான அரசியலில் இருந்து இறங்கி அனைவரையும் அரவணைத்து, சிறுபான்மை மக்களின் உரிமைகளை ஏற்றுச் செல்லும் புதிய பாதைக்கு ஜேவிபி வரவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

# நாவற்குழியில் கடத்தப்பட்ட இளைஞன் காட்டுப்பகுதியில் மீட்பு

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 11வயதுச் சிறுவன் ஒருவன் கடந்த திங்கட்கிழமை மதியம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட நிலையில் அன்றிரவு காட்டுப் பகுதியில் ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த திங்கட்கிழமை சிறுவனின் பெற்றோர் வேலைக்கு சென்ற சமயம் நாவற்குழிஐயனார் கோவில் பகுதியில் உள்ள பேர்த்தியார் வீட்டிற்கு சிறுவன் சென்றிருந்த நிலையில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் உறவினர்கள் இணைந்து சிறுவனை தேடிய போது அப்பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் கட்டப்பட்ட நிலையில் சிறுவன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கைப்பணிகள் சபை 'லக்சல'

LAKSALA All of Sri Lanka

### 'வர்த்தக ஆலோசனைகள்' (Expression of Interest) உடனான முன்மொழிவுகளைக் கோரல்

இலங்கை கைப்பணிகள் சபை (லக்சல) 'புதிய வர்த்தக திட்டமிடலின் கீழ்' இச்சபைக்குச் சொந்தமான லக்சல காட்சியறை வளாகங்களில் பாவனையாளர் சேவையை மேம்படுத்துதல் மற்றும் பாவனைக்கு உதவாத கட்டிடங்களில் இடவசதிகளை இரு தரப்பினருக்கும் நன்மை பயக்குமாறு விளைதிறனுள்ள வர்த்தக ரீதியில் பயனுடையதாக்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற மற்றும் அதற்காக முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய ஆற்றுலுடைய வர்த்தகர்களிடமிருந்து மற்றும் நிறுவனங்களிலிருந்து 'வர்த்தக ஆலோசனைகள் உடனான முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

a) கொழும்பு கோட்டை லக்சல கட்டிடம்

b) பாணந்துறை, கெசெல்வத்த இலகு பொறியியல் கட்டிட வளாகத்தில் தற்போது பாவிக்கப்படாத இடவசதிகள்

c) கட்டுபெத்த தச்சுத் தொழில் மண்டபம்

d) கட்டுபெத்த செயற்றிட்ட வளாகத்தின் விடுதிக் கட்டிடம்

e) கட்டுபெத்த செயற்றிட்ட வளாகத்தில் பாவிக்கப்படாது உள்ள வெற்று தரைப் பிரதேசம்

f) கட்டுபெத்த லக்சல காட்சியறை வளாகத்தின் பிரிவுகள்

g) தும்முல்ல, கொழும்பு 07, லக்சல காட்சியறை வளாகத்தின் ஒரு பகுதி மற்றும் அதன் வாகன நிறுத்துமிடத்தில் பாவிக்கப்பட்டாத பகுதி

h) பொல்கொல்ல லக்சல கட்டிட வளாகம்

i) இந்துருவ அலங்காரப் பொருட்கள் நிலைய வளாகம்.

உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் பிரபலமான 'லக்சல' இலச்சினையுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்கள்/ சார்ந்தோரிடமிருந்து சமர்ப்பிக்கும் ஆலோசனையை பொறியிடப்பட்ட உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் 'வர்த்தக ஆலோசனைகள்' என்று குறிப்பிட்டு இவ் அறிவித்தல் பிரசுரமாகி ஒரு மாதத்திற்குள் (30 நாட்கள்) பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

இச்சபையின் வர்த்தக தன்மையுடன் மிகவும் பொருந்துகின்ற வர்த்தக ஆலோசனைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுவதுடன் கிடைக்கப் பெற்றுள்ள ஆலோசனைகள் சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை இலங்கை கைப்பணிகள் சபை (லக்சல) உரியது.

தேவைப்படும் மேலதிக தகவல்களை தொ.பே. இல. 0714521888 ஐ அழைத்து அல்லது directorsales@laksala.gov.lk மின்னஞ்சல் முகவரி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**இலங்கை கைப்பணிகள் சபை (லக்சல)**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்த,**
**தும்முல்ல,**
**கொழும்பு 07.**



கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கைப்பணிகள் சபை - லக்சல

LAKSALA All of Sri Lanka

### வர்த்தக ஆலோசனைகளுக்கான விலைமனு

உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் கிராமிய பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்காக புதுமையான தயாரிப்புகளை கொண்டு வருவதில் கிராமிய கைப்பணியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு சுயநிதியிடப்பட்ட வர்த்தக நிறுவனமான இலங்கை கைப்பணிச் சபை - லக்சல வாய்புக்களை வழங்குகின்றது.

'வெலட் பங்கு அடிப்படையிலான கருத்தின் கீழ் இலங்கையிலுள்ள சகலரும் லக்சலவுடன் அவர்களது முழு நாமங்களை மேம்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுகின்ற உள்ளூர் கம்பனிகளிடமிருந்து வர்த்தக ஆலோசனைகளை சமப்பிப்பதற்கான அழைப்புக்கள் விடுக்கப்படுகிறது.

**விதிகளும் நிபந்தனைகளும்**

- 'சரக்கு அடிப்படையில்' மாத்திரம் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வார்கள்.
- சரியான காட்சிப்படுத்தலுடன் ஆரம்ப கையிருப்பு மற்றும் போதுமான கையிருப்பு மட்டத்தினை வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் வர்த்தக பங்குதாரர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
- ஒதுக்கப்பட்ட இடத்தில் பிரான்டிங், பொருட்களை ஒழுங்குபடுத்துதல், ஒளிப் பலகைகளை பொருத்துதல், ராக்கைகள் மற்றும் ஏனைய துணையுறுப்புக்கள் விடயத்தில் தேர்ந்தெடுக்கப்படும் வர்த்தக பங்குதாரர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
- இந்த வர்த்தக உடன்படிக்கையின் குறைந்த பட்ச காலம் ஒரு (01) வருடமாக இருக்கும்.
- மாதாந்த நிர்வாகக் கட்டணம் பின்வருமாறு:

| தரைப் பிரதேசம் | மாதாந்த நிர்வாகக் கட்டணம் |
|---|---|
| 50 சதுர அடி | இ. ரூபா. 50,000 |

- லக்சல ஊழியர் குழாம் தயாரிப்புக்களை விற்பதற்கும் கொடுப்பனவுகளை சேகரிப்பதற்கும் பொறுப்பாக இருப்பார்
- லக்சல தயாரிப்பு மட்டத்துடன் போட்டியிருக்கின்ற கைப்பணிகள், நகைகள், மாணிக்கக்கற்கள் அல்லது அத்தகைய பொருட்களையும் ஊக்குவிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

**ஆலோசனைகளைச் சமர்ப்பித்தல்**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வர்த்தக ஆலோசனைகள்' என்று குறிப்பிட்டு இந்த விளம்பரம் பிரசுரமாகி 30 நாட்களுக்குள் அடையுமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் முன்மொழிவுகளை (ஆலோசனைகள்) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 0714-521888 இலக்கத்துடன் அல்லது directorsales@laksala.gov.lk மின்அஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளுங்கள்.

சொல்லப்பட்ட வர்த்தக ஆலோசனைகள்/ RFP களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை கைப்பணிச் சபை (லக்சல) கொண்டிருக்கும்.

**தலைவர்,**
**இலங்கை கைப்பணிகள் சபை - லக்சல**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்த,**
**தும்முல்ல,**
**கொழும்பு-07**


# மன்னாரில் தனியார் பேரூந்து உரிமையாளர்கள் பணிபுறக்கணிப்பு

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் எரிபொருள் கோரி நேற்று புதன்கிழமை (13) பணி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் தனியார் பேரூந்து சேவை, மற்றும் அரச போக்குவரத்து சேவையினருக்கும் இடையில் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக மன்னார் போக்குவரத்து சாலை தனியார் பேரூந்துகளுக்கு வழங்க வேண்டிய டீசலை வழங்காத நிலையில் நேற்று முனதினம் செவ்வாய்க்கிழமை வீதிகளை மறித்து மன்னார் தனியார் பேரூந்து உரிமையாளர்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் குறித்த பிரச்சினையில் தலையிட்டு நேற்று முன்தினம் மாலை 13,200 லீற்றர் டீசல் மன்னார் சாலைக்கு வழங்கிய நிலையில் மாவட்ட செயலகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 5000 லீற்றர் டீசல் மன்னார் தனியார் சேவையினருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இருந்த போதிலும் தனியார் பேரூந்துகளுக்கு எரிபொருள் உரிய விதத்தில் கிடைக்காத நிலையில் நேற்று முழுமையாக பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

# மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் 203 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்பு - ஒருவர் கைது

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பகுதியில் சுமார் 203 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முழங்காவில் கடற்படை முகாம் அதிகாரிகளால் திங்கட்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது குறித்த கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான படகொன்றை சோதனைக்கு உட்படுத்திய போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.சந்தேக நபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை



எடுக்கப்பட்டுள்ளது.இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/07/PT/6321(EL) | Spare Parts for the Stinis Spreaders at ECT | 30,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6329(MP) | 08 Nos. Mobile Crane Tubeless Tyres 445/95 R25 | 75,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6338(MP) | Spares for Caterpillar C -15 Engines of ZPMC 41T RTGC at JCT | 30,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6340(MP) | Engine Spares for Terberg Terminal Tractors | 18,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6336(MP) | Spares for UD Nissan Engine Fitted with UD Nissan Prime Movers | 180,000.00 | 3,500.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/07/PT/6339(MP) | Spares for Caterpillar C – 15 Engines of ZPMC 41T RTGC at JCT | 18,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6335(MP) | Spares for Konecranes TFC 45HC 45 Ton Reach Stacker – 05 | 95,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6346(MP) | Spare parts for the UD Nissan Prime Movers | 45,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6342(MP) | Injector Assemblies for Cummins NTA 855 Engines | 36,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/04/015 | SUPPLY MS I BEAMS | 72,000.00 | 1,000.00 | 28-07-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜூலை 15ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல : 2381652, 2470443**

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை

NLDB

### பெறுகை அறிவித்தல்

### பின்வரும் பயிர்ச்செய்கைக்காக குறுகிய காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: 928/lands-2/2022 - இறுதித் திகதி 2022/08/03 பி.ப. 2.30 மணி**

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைக்குரித்தான பண்ணைகளில் 391 ஏக்கர் காணியில் சோளப் பயிர்ச்செய்கை / போஷணை புல் பயிர்ச்செய்கை மற்றும் பின்வரும் பயிர்ச்செய்கைக்காக குறுகிய காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக பின்வரும் அடிப்படை நிபந்தனைகளின் கீழ் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவரினால் கமத்தொழில் மற்றும் விலங்குணவு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பண்ணை | அமைவிடம் | குத்தகைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கும் காணியின் அளவு (ஏக்கர்) | குத்தகைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கும் பயிர்ச்செய்கை | தொலைபேசி இலக்கம் (தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு) |
|---|---|---|---|---|
| ரிதியகம பண்ணை | ஹம்பாந்தோட்ட மாவட்டம், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு | 200 | சோளம்/ போஷணைப் புல் | 077-3782157/ 047-5678082 |
| வீரவில | ஹம்பாந்தோட்ட மாவட்டம், திஸ்ஸ மஹாராம பிரதேச செயலாளர் பிரிவு | 70 | சோளம்/ போஷணைப் புல் | 076-3064892/ 047-5679299 |
| கொட்டுகச்சிய பண்ணை | புத்தளம் மாவட்டம், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு | 25 | சோளம்/ போஷணைப் புல் | 077-3782134/ 032-5676807 |
| டயகம பண்ணை | நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு | 40 | விதை உருளைக்கிழங்கு/ மரக்கறி | 077-3792132/ 051-5672180 |
| ரொசிட்டா பண்ணை | நுவரெலியா மாவட்டம், கொட்டகலை பிரதேச செயலாளர் பிரிவு | 04 | ஸ்ட்ரோபரி, மலர் பயிர்ச்செய்கை, மரக்கறி வகைகள் (பசுமை இல்லத்திற்குள்) | 077-5254844/ 051-5675404 |
| பொலன்னறுவை பண்ணை | குருநாகல் மாவட்டம், ரஸ்நாயக்க பிரதேச செயலாளர் பிரிவு | 52 (நெல் பயிரிட முடியாத வயல்கள்) | சோளம்/ போஷணைப் புல் | 077-3782144/ 037-5628038 |

மேற்குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பண்ணை முகாமையாளரைத் தொடர்பு கொண்டு இயைபுடைய பண்ணைகளுக்குச் சென்று பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசங்களைப் பரீட்சித்துப் பார்த்ததன் பின் விலைமனுப் படிவங்களை வழங்கலாம். இந்தப் பரீட்சித்தல் நடவடிக்கைகள் பண்ணையின் கண்காணிப்பின் கீழ் பண்ணை வேலைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இதற்கு இயைபான விலைமனுக்களை வாரத்தின் சாதாரண கடமை நேரங்களில் கொழும்பு-05, நாவல வீதி, நாராஹென்பிட்டி, 40ஆம் இலக்கத்தில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் வழங்கல் பிரிவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது 119100153694880 (National Livestock Development Board - Maharagama, Narahenpita Branch) எனும் கணக்கிலக்கத்திற்கு விலைக்கோரல் வைப்பை வைப்புச் செய்து இயைபுடைய பற்றுச்சீட்டு சகிதம் வேண்டுகோள் கடிதத்தை supplies.nldb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 0777-291579 எனும் இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மின்னஞ்சலின் ஊடாக 2022-08-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். ஒரு விலைமனுவிற்கு 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் அறவிடப்படும். குறித்த காணிகளில் ஒவ்வொரு பயிர்ச்செய்கைக்காக வெவ்வேறாக விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இயைபுடைய ஒவ்வொரு விலைமனுக்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய பண்ணையைக் குறிப்பிட்டு சோளம் மற்றும் போஷணை புல் பயிர்ச்செய்கையை வெவ்வேறாக ''சோளம் / போஷணைப் புல் செய்கைக்காக காணியை குத்தகைக்கு வழங்குதல்'' அல்லது ''விதை உருளைக்கிழங்கு / மரக்கறி / ஸ்ட்ரோபரி / மலர்ச் செய்கைக்கு காணியை குத்தகைக்கு வழங்குதல்'' என வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிட்டு 2022-08-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2022-08-03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**
**தொலைபேசி: 011-2501701/2, 011-5746308**



IFAD International Fund for Agricultural Development

SAPP Smallholder Agribusiness Partnerships Programme

### கமத்தொழில் அமைச்சு

### சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**SAPP அலுவலகத்திற்கு வாடகை வாகனங்களை வழங்குதல்**

**SAPP/PRO/SERV/2022/14**

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் SAPP அலுவலகத்திற்கு வாடகை வாகனங்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பின் கீழ் நிலை பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன. விலைமனுதாரர்கள் சகல வாகனங்களுக்கும் விலைக்கோருதல் வேண்டும் என்பதுடன் விலைமனுப்பிணை முறியொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தேவையான வாகனங்களின் எண்ணிக்கை | தேவைப்பாடு களின் விபரம் | வாகனத் தேவைப்பாடுகளின் விபரம் | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 07 | ஒரு மாதத்திற்கு 2500 கி.மீ. மற்றும் 2000 கி.மீ. பொதிகள் | உற்பத்தி வருடம் 2015<br>(AC, சாரதி மற்றும் எரிபொருள் சகிதம்)<br><br>**வாகனங்களின் பட்டியல்**<br>01 எண்ணிக்கையான பயணிகள் வேன் (Dual AC சகிதம்)<br>04 எண்ணிக்கையான டபள் கெப் (AC, 4WD)<br>01 எண்ணிக்கையான சிறிய கார் (பெட்ரோல்)<br>01 எண்ணிக்கையான சாதாரன கார் (பெட்ரோல்) | ரூபா 100,000.00 |

2. உத்தேச சேவைக் காலம் ஒரு வருடமாகும்.
3. பெறுகைகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் ஊடாக சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2448031) மற்றும் தேவையான ஆவணங்களை ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்ட பெறுகைப் பிரிவில் 2022-07-12ஆம் திகதி முதல் 2022-07-25ஆம் திகதி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,500.00 கட்டணத்தைச் செலுத்தி மற்றும் 2022-07-12ஆம் திகதி முதல் 2022-07-25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு வழங்குவதற்கு விலைக்கோர எதிர்பார்க்கும் வாகனங்களின் பட்டியல் மற்றும் வாகன இலக்கங்களை உள்ளடக்கிய எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். விண்ணப்பிக்கும் போது எழுதப்பட்ட கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் பட்டியல் மற்றும் எண்ணிக்கை விலைக்கோரல் மதிப்பீட்டுக் கட்டத்தில் முழுமையாக மீள் பரிசீலனை செய்யப்படும்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு ஏனைய பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் சகிதம் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் பின்வரும் முகவரிக்கு 2022-07-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
7. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''SAPP அலுவலகத்திற்கு வாடகை வாகனங்களை வழங்குதல்'' (ஒப்பந்த இலக்கம SAPP/PRO/SERV/2022/13) எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமல் நிராகரிக்கப்படும். முடிவுறுத்தல் நேரத்தின் பின் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் மேற்படி அட்டவணையில் மற்றும் விலைமனு ஆவணத்தின் குறிப்பிடப்பட்ட தொகைக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு (கீழ் நிலை),**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம்,**
**இல. 212/A, நாவல வீதி,**
**இராஜகிரிய.**


# வவுனியாவில் 33ஆவது வீரமக்கள் தினம் அனுஸ்டிப்பு

**கோவில் குளம் குறூப் நிருபர்**



வவுனியாவில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் 33ஆவது வீரமக்கள் தினம் நேற்று காலை 10.00 மணிக்கு கோவில்குளம் உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் புளொட் அமைப்பின், வவுனியா மாவட்ட அமைப்பாளரும், வவுனியா நகரசபை உறுப்பினருமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்) தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்ட தினமான யூலை 13ம் திகதி முதல் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் செயலதிபர், கதிர்காமர் உமா மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட தினமான யூலை 16ம் திகதி வரையிலான காலப்பகுதியை வீர மக்கள் தினமாக புளொட் அமைப்பு பிரகடனப்படுத்தி ஆண்டுதோறும் அனுஷ்டித்து வருகின்றது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிரை ஈந்த கழகத்தின் போராளிகள், தலைவர்கள், மற்றும் பொதுமக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் வகையில் வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் நேற்று தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டு வீர மக்கள் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


IFAD International Fund for Agricultural Development

SAPP Smallholder Agribusiness Partnerships Programme

### கமத்தொழில் அமைச்சு

### சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. **சோளப் பயிர்ச்செய்கை செயற்றிட்டத்திற்கு துணைப்பாகங்களுடன் 5894 எண்ணிக்கையான Multipurpose Brush Cutter இயந்திரங்களுக்கான பெறுகை**
2. **பாற் பண்ணை செயற்றிட்டத்திற்கு 2000 எண்ணிக்கையான Chaff Cutter இயந்திரங்களுக்கான பெறுகை**

**ஒப்பந்த இலக்கம்: SAPP/PRO/GDS/2022/04 மற்றும் SAPP/PRO/GDS/2022/15**

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் கிரயச் செலவிற்காக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து (IFAD) கடனொன்றைப் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடன் வருவாயின் ஒரு பகுதியை மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்கான ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவிற்கு செலுத்த விரும்புகின்றது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள இயந்திராதிகள் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்களின் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் சார்பில் உயர் நிலை பெறுகைக் குழுவின் (PPC-Major) தலைவர் அழைக்கின்றார். மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.

| விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | உருப்படிகளின் பெயர் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறித் தொகை | விநியோக அமைவிடங்கள் |
|---|---|---|---|---|
| 1.SAPP/PRO/GDS/2022/04 | துணைப்பாகங்களுடன் Multipurpose Brush Cutter இயந்திரங்களுக்கான பெறுகை (சோளப் பயிர்ச்செய்கை செயற்றிட்டத்திற்கு) | 5894 இயந்திரங்கள் | ரூபா 2.65 மில்லியன் | அநுராதபுரம், மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள் |
| 2.SAPP/PRO/GDS/2022/15 | Chaff Cutter இயந்திரங்கள் (பாற் பண்ணை செயற்றிட்டத்திற்கு) | 2000 இயந்திரங்கள் | ரூபா 3.0 மில்லியன் | வடமத்திய மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் |

2. விலைமனுதாரர்களின் தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
   - அ. கடந்த ஐந்து வருடங்களினுள், செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொண்ட சான்றுபடுத்தப்பட்ட கொடுப்பனவாக கணக்கிடப்பட்ட ஆகக்குறைந்த சராசரி வருடாந்த புரள்வாக 300 மில்லியன் இலங்கை ரூபா
   - ஆ. ஆர்வமுள்ள விலைமனுதாரர் எட்டு (08) வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   - இ. ஆர்வமுள்ள விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளர் கடந்த ஐந்து வருட காலத்தினுள் (2017 - 2021) இதனையொத்த பொருட்கள் மற்றும் சேவை ஒப்பந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவராகவிருத்தல் வேண்டும்.
3. பெறுகைகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் 011-2448031 எனும் தொலைபேசி இலக்கம் அல்லது gamini@sapp.lk எனும் மின்னஞ்சல் ஊடாக சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் (SAPP) பெறுகை நிபுணரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தில் 2022-07-12ஆம் திகதி முதல் 2022-07-26ஆம் திகதி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-07-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தில் இடம்பெறும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 35,000.00 கட்டணத்தைச் செலுத்தி மற்றும் 2022-07-12ஆம் திகதி முதல் 2022-07-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2022-07-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் முதல் 60 நாட்களுக்கு அல்லது கொள்வனவாளரால் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட நாள் வரை செல்லுபடியாதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் (விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்) என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் 02ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டதும் மற்றும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல் நிலை),**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம்,**
**இல. 212/A, நாவல வீதி,**
**இராஜகிரிய.**
**2022-07-10.**

## 1964ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு சட்டத்தின் இல: 28 இன் (அத்தியாயம் 460) கீழான அறிவித்தல்

சுபீத்தி புரவர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கலப்பு அபிவிருத்தி (வீட்டு) கருத்திட்டதிற்காக காணி சுவீகரித்தல்

முன்னேற்ற சுவட்டு இல. CO/KSP/2017/341 துண்டு இல 1.6 மற்றும் 7 இன் கீழ் அரசு சுவீகரிக்கும் காணியானது கீழ் அட்டவணையில் குறிப்பிடும் காணித்துண்டுகள் 39(1) பிரிவின் கீழ் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரங்களுக்கு 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி இல. 2247/30 இணைக் கொண்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்த மாணியின் 111ஆம் பக்கத்தினை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கொழும்பு |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கெஸ்பேவ |
| கிராமம் | : நாம்பமுனுவ |
| கிராம சேவகர் | |
| அமைவிடம் | : பல்லேபத்துவ |
| விஸ்தீரணம் | : 1.0232, 0.2320, 0.5052 |
| அடிப்படை திட்டமிடலின் இல : | முன்னேற்ற சுவட்டு இல CO/ KSP/2017/341 |
| துண்டு இல. | : 1, 6 மற்றும் 7 |

**கே.பி. இப்பிரேமதாச**
**பிரதேச செயலாளர் மற்றும் காணி சுவீகரிக்கும் அதிகாரி**
**கெஸ்பேவ.**

---

## அறிவித்தல்

## அதிவிசேட பொதுக்கூட்டம் – ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி – முன்மொழியப்பட்ட தனிப்பட்ட இடுகை (Proposed Private Placement)

2022 ஜூலை 6 இல் கொழும்பு பங்குச்சந்தையின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான கூட்டம் மற்றும் சுற்றுநிருப அறிவித்தலுக்கு அமைய, 2022 ஜூலை 6 ஆம் திகதிய கூட்ட அறிவித்தலில் விரிவாகக் கூறப்பட்ட சிறப்புத் தீர்மானம் ஒன்றை பரிசீலிப்பது மற்றும் பொருத்தம் என நினைத்தால் நிறைவேற்றும் நோக்கத்திற்காக 2022 ஓகஸ்ட் 4 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ("நிறுவனம்") அதிவிசேட பொதுக் கூட்டம் ("கூட்டம்") ஒன்று நடத்தப்படும்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்க முடியாமலுள்ள உறுப்பினர் ஒருவர் பிரதிநிதிக்கான படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலம் தமது சார்பில் கூட்டத்தில் பங்கேற்பதற்கு மற்றும் வாக்களிப்பதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு உரிமை பெறுவார். இது செல்லுபடியாகும் பொருட்டு, பிரதிநிதியின் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் 48 மணி நேரத்திற்கு குறையாது நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பின்வரும் ஆவணங்கள்;**

- பங்குதாரர்களுக்கான சுற்றநிருபம்
- கூட்ட அறிவித்தல்
- பிரதிநிதியின் படிவம் (பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் அதில் உள்ள ஆதார ஆவணங்கள்)
- மெய்நிகர் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிகாட்டல் கிடைக்கப்பெறும் இணையத்தளங்கள்:
  (1) நிறுவனத்தின் கூட்டு நிறுவன இணையதளம்:
  *https://keells.com/resource/egm-notice-July-2022/JKH-Convertible-Debentures.pdf*
  (2) கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளம்
  https://www.cse.lk/

**சபையின் ஆணைப்படி**
**ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சிக்காக**
**KEELLS CONSULTANTS (PRIVATE) LIMITED**
**செயலாளர்கள்**
**2022 ஜூலை 14**

---

# பண்டாரகம பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

### பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள நவீன வர்த்தக கட்டிடத்தொகுதியின் தரை மாடியில் இல 07 எனும் கடை அறையை குத்தகை அடிப்படையில் 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடல்

பண்டாரகம பிரதேச சபைக்குச் சொந்தமான, பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள நவீன வர்த்தக கட்டிடத் தொகுதியின் தரை மாடி இல. 07 கடை அறையை குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| கடை அறை இலக்கம் | சதுர மீட்டர் அளவு | மாதாந்த குறைந்தபட்ச மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. சதம் | வைப்புத் தொகை ரூ. சதம் |
|---|---|---|---|
| கடை அறை இல - 07 | 11.25 | 14,000.00 | 336,000.00 |

II. விசேடமாக இக்கடை அறை இறைச்சி, மீன் விற்பனை, சூதாட்ட விளையாட்டுகள், ரேஸ் சூதாட்ட விடயங்கள் அல்லது மதுபானசாலை தவிர்ந்த வியாபார விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

III. கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் மீளளிக்கப்படும் ரூ. 3,000.00 கேள்வி வைப்புத் தொகையையும் மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கேள்விப் படிவ வைப்பையும் 2022.08.01ம் திகதி பி.ப. 3.00 முன் அரச விடுமுறை தவிர்ந்த தினங்களில் பண்டாரகம பிரதேச சபையின் தலைமையகத்திற்கு செலுத்திய பின்பு கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

IV. நகல் பிரதியுடனான கேள்விப் பத்திரங்களை பொறியிடப்பட்ட உறையில் இட்டு கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பண்டாரகம நகர மத்தியில் அமைந்துள்ள நவீன கட்டிடத் தொகுதியின் தரை மாடியில் இல. 07 எனும் கடை அறையை குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடல்' என்று குறிப்பிட்டு 2022.08.02ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் 'தலைவர், பண்டாரகம பிரதேச சபை, பாணந்துறை வீதி, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

V. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2022.08.02ம் திகதி பி.ப. 2.05 இற்கு பண்டாரகம பிரதேச சபை தலைமையகத்தில் இடம்பெறுவதுடன், அதற்காக விண்ணப்பதாரிக்கு அல்லது கேள்விதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

VI. தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைதாரருக்கு அது பற்றி அறிவித்து 14 நாட்களுக்குள் தம்மால் சமர்ப்பிக்கப்படும் தொகையை பண்டாரகம பிரதேச சபைக்கு ஒரே முறையில் செலுத்தி குத்தகை உரிமையை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவித்ததன் பின்னர் காசு செலுத்துவதை நிராகரிப்பின் கேள்விப் பிணைத் தொகை சபைக்கு உரியதாக ஆக்கப்படும்.

VII. இக்குத்தகைக்கு விடல் சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படின் அலுவலகத்திற்கு நேரில் வந்து அல்லது தொ.பே. 038-2290975 இலக்கத்தை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

VIII. கேள்வி மாதிரிப் பத்திரங்கள், கேள்வி நிபந்தனைகள் அடங்கிய சகல ஆவணங்களையும் இவ் அறிவித்தலின் ஒரு பகுதியெனக் கொள்ளல் வேண்டும்.

IX. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பண்டாரகம பிரதேச சபைக்கு உரியது.

**2022.07.08**
**பண்டாரகம பிரதேச சபை, பண்டாரகம.**
**038-2290975**

**எச்.ஏ.எச். தேவேந்தர பெரேரா**
**தலைவர்**
**பண்டாரகம பிரதேச சபை**

---

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/081** வாடகைக்கு வான் /டபிள்கப் மின் அத்தியட்சகர் (அம்பாறை மின் பாவனையாளர் சேவை நிலையம்)– அம்பாறை (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/082** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (அக்கரைப்பற்று மின் பாவனையாளர் சேவை நிலையம்) அம்பாறை (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/083** வாடகைக்கு வான் /டபிள்கப் மின் அத்தியட்சகர் (தெகியத்தகண்டிய மின் பாவனையாளர் சேவை நிலையம்)– அம்பாறை (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/084** வாடகைக்கு வான் /டபிள்கப் மின் அத்தியட்சகர் (வர்த்தகம்) – மட்டக்களப்பு (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு 065-2222639 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/085** வாடகைக்கு வான் /டபிள்கப் நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் - மட்டக்களப்பு (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு 065-2222639 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/086** வாடகைக்கு கட்டிடம் - நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் - மட்டக்களப்பு (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,மட்டக்களப்பு 065-2222639 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/087** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையம்)- கல்முனை (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது பொறியியலாளர்(கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/088** வாடகைக்கு மோட்டார் கார் பிரதம மின் பொறியியலாளர் (கல்முனை) (இரண்டு வருட காலம்) | 27.07.2022ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை 067-2229276 அல்லது பிரதிப் பொது பொறியியலாளர்(கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**



## விம்பிள்டன்: 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார் ஜோகோவிச்

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றுள்ளார். கடந்த (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற இறுதிப் போட்டியில், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், அவுஸ்ரேலியாவின் நிக் கிர்கியோசை எதிர்கொண்டார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், நோவக் ஜோகோவிச், 4-6, 6-3, 6-4, 7-6 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். இது அவரது 7 ஆவது விம்பிள்டன் டென்னிஸ் சம்பியன் பட்டமாகும்.

இதேபோல பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், கஸகஸ்தானின் எலெனா ரைபகினா, துனிசியாவின் ஒன்ஸ் ஜபீரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

### டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில்

# இலங்கை அணி முன்னேற்றம்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதனை தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் அணி ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பிற்காக நடைபெற்ற தம்முடைய மூன்றாவது தொடரினை 1-1 என சமநிலை செய்திருக்கின்றது.

மேலும் இந்த வெற்றியானது இலங்கை கிரிக்கெட் அணியினை 2021-23 பருவகாலத்திற்கான ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கும் கொண்டு சென்றிருக்கின்றது.

அவுஸ்திரேலிய – இலங்கை அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியினைப் பதிவு செய்திருந்ததோடு, அந்த வெற்றியுடன் ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக மொத்தம் 84 புள்ளிகள் பெற்ற அவுஸ்திரேலிய அணி 77.78 என்கிற சதவீத வெற்றியோடு புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தில் காணப்பட்டிருந்தது. மறுமுனையில் இலங்கை கிரிக்கெட் அணி 40 புள்ளிகள் பெற்று 47.62 என்கிற சதவீத வெற்றியுடன் ஆறாம் இடத்தில் காணப்பட்டிருந்தது.

இலங்கை அணிக்கு அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கிடைத்த வெற்றி 12 மேலதிக புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்திருப்பதோடு, இலங்கை அணியின் வெற்றி சதவீதத்தினையும் அது 54.17 ஆக அதிகரித்திருக்கின்றது.

இந்த வெற்றி சதவீத அதிகரிப்பு, இலங்கை கிரிக்கெட் அணியினை ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அணிகளுக்கான புள்ளிகள் பட்டியலில் தற்போது மூன்றாம் இடத்திற்கு கொண்டு சென்றிருக்கின்றது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தோல்வியடைந்த காரணத்தினால் அது ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் அதன் வெற்றி சதவீதத்தினை 70 ஆக குறைக்க, அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி புள்ளிகள் பட்டியலில் தமது முதல் இடத்தினை இழந்து இரண்டாம் இடத்திற்குச் சென்றிருக்கின்றது.

ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 60 புள்ளிகளுடன் 71.43 என்கிற வெற்றி சதவீதத்துடன் காணப்படும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் முதல் இடத்தினை தற்போது பெற்றிருக்கின்றது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் முறையே நான்காம், ஐந்தாம் இடங்களில் பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் காணப்படுகின்றன.

ICC World Test Championship 2021 - 2023

| POS | TEAM | PCT (%) | PTS | MATCHES W | L | D | SER | PEN |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | SOUTH AFRICA | 71.43 | 60 | 5 | 2 | 0 | 3 | 0 |
| 2 | AUSTRALIA | 70 | 84 | 6 | 1 | 3 | 3 | 0 |
| 3 | SRI LANKA | 54.17 | 52 | 4 | 3 | 1 | 4 | 0 |
| 4 | PAKISTAN | 52.38 | 44 | 3 | 2 | 2 | 1 | 0 |
| 5 | INDIA | 52.08 | 75 | 6 | 4 | 2 | 4 | -5 |
| 6 | WEST INDIES | 50 | 54 | 4 | 3 | 2 | 4 | -2 |
| 7 | ENGLAND | 33.33 | 64 | 5 | 7 | 4 | 4 | -12 |
| 8 | NEW ZEALAND | 25.93 | 28 | 2 | 5 | 1 | 4 | 0 |
| 9 | BANGLADESH | 13.33 | 16 | 1 | 8 | 1 | 5 | 0 |

## எல்பிஎல் தொடருக்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக வெளியீடு

மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடருக்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்பிஎல் தொடரானது அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி, 21ம் திகதிவரை நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு சம்பியன் கிண்ணத்தை வெற்றிக்கொண்ட ஜப்னா கிங்ஸ் அணி மற்றும் இரண்டாவது இடத்தை பிடித்துக்கொண்ட கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகள் முதல் போட்டியில் விளையாடவுள்ளன.

தொடரில் மொத்தமாக 20 லீக் போட்டிகள் உட்பட 24 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆகஸ்ட் 10ம் திகதிவரை 14 போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், இந்தப்போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன் பின்னர் நடைபெறவுள்ள லீக் போட்டிகள், குவாலிபையர், எலிமினேட்டர் மற்றும் இறுதிப்போட்டிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு நாட்களும் தலா 2 லீக் போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், முதல் போட்டி பிற்பகல் 03.00 மணிக்கும், இரண்டாவது போட்டி இரவு 07.30 மணிக்கும் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

| DATE | HOME | AWAY | HOME | AWAY | VENUE |
|---|---|---|---|---|---|
| 1st August 2022 | Jaffna | Galle | Colombo | Kandy | RPICS |
| 2nd August 2022 | Dambulla | Jaffna | Galle | Colombo | RPICS |
| 4th August 2022 | Kandy | Galle | Jaffna | Dambulla | RPICS |
| 5th August 2022 | Kandy | Colombo | Galle | Dambulla | RPICS |
| 8th August 2022 | Colombo | Dambulla | Galle | Jaffna | RPICS |
| 9th August 2022 | Kandy | Dambulla | Colombo | Galle | RPICS |
| 10th August 2022 | Kandy | Jaffna | Dambulla | Colombo | RPICS |
| 13th August 2022 | Galle | Kandy | Jaffna | Colombo | MRICS |
| 14th August 2022 | Dambulla | Kandy | Colombo | Jaffna | MRICS |
| 15th August 2022 | Dambulla | Galle | Jaffna | Kandy | MRICS |
| 17th August 2022 | Qualifier 1 (1 vs 2) | | Eliminator (3 vs 4) | | MRICS |
| 19th August 2022 | | | Qualifier 2 (Loser QF1 vs Winner of Eliminator) | | MRICS |
| 21st August 2022 | | | Final | | MRICS |



## இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் சாதனை



இங்கிலாந்து இந்தியா அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ரி 20 தொடரை இந்திய அணி கைப்பற்றிய நிலையில் ஒருநாள் தொடரையும் வெல்லும் நோக்கத்தில் இந்திய அணி களமிறங்கியது. இந்த போட்டியில் இந்திய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்தின் 10 விக்கெட்டுகளையும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களே (பும்ரா6, ஷமி3, பிரசித் கிருஷ்ணா1) சாய்த்தனர். ஒருநாள் கிரிக்கெட்டில் இன்னிங்சின் 10 விக்கெட்டுகளையும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் முழுமையாக வீழ்த்துவது இது 7வது நிகழ்வாகும். இதையும் படியுங்கள்: ஐசிசி ஒருநாள் அணி தரவரிசை இந்திய அணி முன்னேற்றம் இந்த ஆட்டத்தில் 3 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய பவுலர் முகமது ஷமியின் ஒட்டுமொத்த விக்கெட் எண்ணிக்கை 151 ஆக (80 ஆட்டம்) உயர்ந்தது. இதன் மூலம் 150 விக்கெட்டுகளை அதிவேகமாக எட்டிய இந்தியர் என்ற பெருமையை பெற்றார். ஒட்டுமொத்தத்தில் ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித்கானுடன் 3வது இடத்தை பகிர்ந்துள்ளார். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இதுவரை 10 இந்தியர்கள் இன்னிங்சில் 6 விக்கெட் வீழ்த்தியுள்ளனர். இதில் சிறந்த பந்து வீச்சை கொண்டுள்ள ஸ்டூவர்ட் பின்னி 4 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் (பங்களாதேஷுக்கு எதிராக 2014) கைப்பற்றி உள்ளார். கும்ளே (6-12), பும்ரா (6-19), ஆஷிஷ் நெஹரா (6-23), குல்தீப் யாதவ் (6-25), முரளிகார்த்திக் (6-27), அஜித் அகர்கர் (6-42), யுஸ்வேந்திர சாஹல் (6-42), அமித் மிஸ்ரா (6-48), ஸ்ரீசாந்த் (6-55), ஆஷிஷ் நெஹ்ரா (6-59) ஆகியோர் 6 விக்கெட் வீழ்த்திய மற்ற இந்தியர்கள் ஆவர். இந்த வெற்றி மூலம் 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 2வது ஆட்டம் இன்று நடக்கிறது.

## தென் ஆபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து வெற்றி



மகளிர் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்க அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி ஆடிய தென் ஆபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 218 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சி ட்ரையான் 88 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து அணி தரப்பில் நடாலி ஸ்கிவர் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதனையடுத்து 219 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. தொடக்க வீராங்கனைகளாக டாமி பியூமண்ட் லம்ப் ஜோடி களமிறங்கியது. 1 ரன் எடுத்த நிலையில் டாமி பியூமண்ட் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சோபியா டங்க்லி 22 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். லம்ப் நடாலி ஸ்கிவர் ஜோடி நிதானமாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தனர். நடாலி ஸ்கிவர் 55 ஓட்டங்கள் எடுத்த போது விக்கெட்டை பறிகொடுத்தார். ஒரு பக்கம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தொடக்க வீராங்கனை லம்ப் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். அவர் 102 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் பிடி எடுத்து வெளியேறினார். இறுதியில் இங்கிலாந்து பெண்கள் அணி 32.1 ஓவரில் 219 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 2வது ஒருநாள் போட்டி நாளை 15ம் திகதி நடைபெறவுள்ளது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..............................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..............................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..............................
வாக்களித்தவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
மொபைல் இல. : ..............................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-07-2022 இல. 16

MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!
SLTMOBITEL

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுலை மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.